Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 14

புதன்கிழமை
10 டிசெம்பர் 2025

கார்த்திகை 24 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

புதன்பொய்கை

## பேருந்திலிருந்து வீழ்ந்தவர் பலி!

யாழ்ப்பாணம், டிசெ. 10
பேருந்தில் இருந்து தவறி வீழ்ந்த குடும்பத்தலைவர், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில்

»15




# எம்மைச் சுட்டுக்கொன்றாலும் ஆக்கிரமிப்பை அனுமதியோம்

## வவுனியா ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் முழக்கம்



வவுனியா, டிசெம்பர் 10

பூர்வீக மக்களை வெளியேற்றிவிட்டு, மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிமால் சிறிபால டி சில்வாவின் சகோதரிக்கு வவுனியா வடக்கில் 25 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. எம்மைச் சுட்டுக்கொன்றாலும் இத்தகைய ஆக்கிரமிப்பை வெளிப்படுத்தாமல் விடப்போவதில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.

»15

வவுனியா வடக்கில்

## சட்டவிரோத காடழிப்பு நடவடிக்கைக்கு உடந்தையாக வனவளத் திணைக்களம்!

### வவுனியா ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நேற்றுக் காரசாரமான வாக்குவாதம்

வவுனியா, டிசெ. 10
மக்களின் பூர்வீகப் பகுதிகளை விடுவிக்க முடியாது என்றுகூறும் வனவளத் திணைக்களம், வவுனியா வடக்கு பகுதியில் ஆயிரக் கணக்கான ஏக்கர் காடுகளை அழிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதாக வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்

»15

## வங்காள விரிகுடாவில் புதிய காற்றுச் சுழற்சி!

யாழ்ப்பாணம், டிசெ. 10
வங்களா விரிகுடாவில் புதிய காற்றுச் சுழற்சியொன்று உருவாகச்சாத்தியம் உள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.
தென்கிழக்கு வங்காள விரிகுடாவிலேயே இந்தக் காற்றுச் சுழற்சிக்குச் சாத்தியம் உள்ளது. எனினும் எதிர்

»15



துணைவேந்தர் தெரிவு

## பேராசிரியர் வேல்நம்பி முன்னிலை

யாழ்., டிசெ. 10
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புதிய துணைவேந்தர் தெரிவில், யாழ்ப்பாணப் பல்கலைக்

»15

25,000 ரூபா கொடுப்பனவு தொடர்பில்

## கிராம அலுவலர் எவரும் முடிவெடுக்க முடியாதாம்

### நல்லூர் பிரதேசசெயலர் பாய்ச்சல்

யாழ்ப்பாணம், டிசெ.10
டித்வா புயலால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் கிராம உத்தியோகத்தர்களுக்கு இல்லை என்று உதயன் ஆசியபீடத்து

»15

## மன்னார் மாவட்ட மக்களுக்கு வெள்ளப் பேரிடர் எச்சரிக்கை

மன்னார், டிசெ. 10
பறங்கியாறு மற்றும் பாலியாறு வெள்ளம் தொடர்பில், மன்னார் மாவட்ட மக்களுக்கு இடர் முகாமைத்துவப் பிரிவால் எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.
வடகிழக்குப் பருவமழை காரணமாக வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை

»15



பூச்சந்தி முரளி

'மடியில கனமிருக்காட்டி வழியில பயம் இருக்காது கண்டியளோ...!'

## டித்வா பேரிடர்கள் தொடர்பில் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதா?

### தெரிவுக்குழுவை அமைத்து ஆராய்வதற்குக் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 10
டித்வா புயலால் ஏற்படும் பேரிடர் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தப்பட்டதா என்பது பற்றி ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய குடியரசு முன்னணி தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரி

»15

தமிழர்களைக் கொல்வேன் எனக்கூறிய

## சுமணரத்ன தேரரை உடன் கைதுசெய்க

### 15ஆம் திகதிக்கு முன்னர் முற்படுத்துமாறு மட்டக்களப்பு நீதிமன்றம் அதிரடி உத்தரவு

கொழும்பு, டிசெ. 10
தமிழ் மக்களை வெட்டிக்கொல்ல வேண்டும் எனக்கூறிய குற்றச்சாட்டுத் தொடர்பில், சுமணரத்ன தேரரைக் கைது செய்ய வேண்டும் என்றும், எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துமாறும் மட்டக்களப்பு

»15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 42780 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 02 05 35 62 |
| விசேட எழுத்து | P |

**ஹந்தஹன ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1347 |
| வெற்றி இலக்கினம் | தனு |
| வெற்றி இலக்கங்கள் | 19 45 52 59 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | |
| ஆங்கில எழுத்து | |
| வெற்றி இலக்கங்கள் | |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2386 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 12 |
| வெற்றி இலக்கங்கள் | 13 41 66 73 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6038 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 0 1 3 5 9 5 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2068 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 06 11 16 28 |
| விசேட எழுத்து | U |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0154 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 13 56 64 |

# கைத்தொழில்களை மீட்டெடுக்க 2 இலட்சம் ரூபா கொடுப்பனவு

கொழும்பு, டிசெ.10

**நாட்டில் ஏற்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களை மீண்டும் இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்காக அரசாங்கத்தால் 2 இலட்சம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதற்காக கைத்தொழில் உரிமையாளர்கள் www.industry.gov.lk எனும் இணையத்தளம் ஊடாக அல்லது மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறு தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஏற்றுமதி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் ஊடாக இந்த கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும்.

'டித்வா' புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள கைத்தொழில்களை மீளக்கட்டியெழுப்புவதற்காக இது தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையொன்றை கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு முன்னெடுத்துள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பில் அமைச்சுக்கு தகவல் வழங்குவதற்கு 0712666660 எனும் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பான தகவல்களை எதிர்வரும் 16 ஆம் திகதி பிற்பகல் 2. மணிக்கு முன்னர் வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0746 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 3 1 1 8 7 5 |

**Super Ball DLB**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3012 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 01 27 31 40 |

**சனிதா DLB**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கம் | 22 46 63 72 |
| வெற்றி வாரம் | 5173 |

**SASIRI DLB**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0842 |
| வெற்றி இலக்கம் | 08 26 43 |

**லக்ன ராசி DLB**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ரிஷபம் | |
| வெற்றி இலக்கம் | 01 02 05 23 |
| சீட்டிழுப்பு வாரம் | 4724 |

**KAPRUKA DLB**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 30 |
| வெற்றி இலக்கம் | 21 37 44 68 |
| வெற்றி வாரம் | 2188 |

**அத கோடிபதி DLB**

| | |
|---|---|
| திகதி | 09.12.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 03 30 58 73 |
| வெற்றி வாரம் | 2838 |

## 'டித்வா' பேரிடரால் வீடுகள் சேதம் 5000+

கொழும்பு, டிசெ.10

'டித்வா' சூறாவளியால் ஏற்பட்ட பேரிடர் நிலைமை காரணமாக நாட்டில் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 5,000ஐ கடந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பித்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, பேரிடரால் 5,325 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. கண்டி மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான வீடுகள் சேதமடைந்துள்ளன. அந்த மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 1,815 ஆக பதிவாகியுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் 767 வீடுகள் சேதமடைந்துள்ளன. குருநாகல் மாவட்டத்தில் 476 வீடுகளும், புத்தளம் மாவட்டத்தில் 415 வீடுகளும், பதுளை மாவட்டத்தில் 404 வீடுகளும் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 300 வீடுகளும் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இதற்கிடையில், பேரிடரால் பகுதியளவு சேதமடைந்த வீடுகளில் அதிகபட்சமாக கண்டி மாவட்டத்தில் 13,422 வீடுகள் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## குடிதண்ணீரில் விலைமீறல் அபராதம் ஒரு கோடி ரூபா!

கொழும்பு, டிசெ.10

அதிக விலைக்குக் குடிதண்ணீர்ப் போத்தல்களை விற்பனை செய்த விடுதி ஒன்றுக்கும் தனியார் நிறுவனமொன்றுக்கும் ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபைக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் குற்றச்செயல் கண்டறியப்பட்டது.

100 ரூபாவுக்கு விற்கப்பட வேண்டிய ஒரு லீற்றர் குடிதண்ணீர் போத்தல் ஒன்றை 400 ரூபாவுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில், குறித்த நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)



## ரூ.50 ஐ எட்டும் முட்டை விலை!

கொழும்பு, டிசெ.10

சந்தையில் ஒரு முட்டையின் சில்லறை விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

ஒரு முட்டையின் விலை ரூ.40 முதல் 50 வரை விற்கப்படுவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து பண்ணைகள் வெள்ளத்தில் மூழ்கியதால் ஏற்பட்ட முட்டை பற்றாக்குறையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## நடப்பாண்டில் 110 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, டிசெ.10

இந்த வருடத்தில் இதுவரை 110 துப்பாக்கிச்சூடுகள் பதிவாகியுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதில் 83 சம்பவங்கள் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையேயான மோதல்களென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து 6ஆம் திகதி வரை நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் 3 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் காயமடைந்துள்ளார். (ச-இ)

## நாகப்பட்டினம்- காங்கேசன்துறை கப்பல் சேவை மீண்டும் தாமதம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

நாகபட்டினம் - காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் சேவை யை ஆரம்பிப்பதில் மீண்டும் தடை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்ட கப்பல் சேவையை இந்த மாதம் முதல் வாரத்தில் மீண்டும் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் மோசமான காலநிலை மற்றும் புயல் தாக்கத்தால் காங்கேசன்துறைமுகத்தில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றை மறு சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால், கப்பல் சேவை தொடங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரண உதவிகளை நிர்வகிக்க உயர்மட்டக் கண்காணிப்புக் குழு

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.10**
**இயற்கைப் பேரிடர் காரணமாக சுமார் 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

மனிதாபிமான உதவிகள் சரியான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டு மக்களிடம் விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்கான உயர் மட்ட தேசியக் கண்காணிப்புக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு அவர் தெரிவித்துள்ளதாவது-

இயற்கைப் பேரிடரால் 22 மாவட்டங்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பல்வேறு நாடுகளில் இருந்து தொடர்ச்சியாக உதவிகள் கிடைத்துவரு கின்றன. அந்த நிவாரணங்கள் முறையாக மக்களை சென்றடைய வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார். இவற்றை முகாமைத்துவம் செய்து கண்காணிப்பதற்காக என்னுடைய தலைமையில் உயர்மட்ட தேசியக் கண்காணிப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதில் முப்படை மற்றும் பொலிஸ் உட்பட துறைசார் உயர் மட்ட அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்-என்றார். (எ-இ)

## வாகனங்கள் சேதம் தகவல்கள் சேகரிப்பு

கொழும்பு, டிசெ. 10
அனர்த்த நிலைமை காரணமாக அழிவடைந்த வாகனங்கள் தொடர்பான தகவல்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருவதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதியின் பின்னர் மாவட்ட மட்டத்தில் இது தொடர்பான விசேட நடமாடும் சேவையொன்றை முன்னெடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த தகவல்களின் அடிப்படையில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் பரிசோதனைக்கு உட்படுத்தி, அவை பயன்பாட்டிற்கு உகந்ததா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். மேலும், அனர்த்த நிலைமை காரணமாக சிலரது வாகனங்கள் மற்றும் ஆவணங்களும் அழிவடைந்துள்ளதாகவும், அந்த தகவல்களையும் பெற்றுக்கொண்டு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும்.

இதுதொடர்பில் 0707188866 என்ற வட்ஸ்எப் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக உரிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வெள்ளத்தால் பழுதடைந்த ஆயிரம் கிலோ அரிசி மீட்பு

கொழும்பு,டிசெ.10
வெள்ளத்தால் பழுதடைந்து, மனிதப் பாவனைக்கு உதவாத ஆயிரம் கிலோ அரிசி கண்டி ஹரிஸ்பத்துவப் பிரதேசத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன. கண்டி பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்குக் கிடைத்த தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த அரிசி கைப்பற்றப்பட்டது. மனிதப் பாவனைக்கு உதவாத இந்த அரிசியை சட்ட விரோதமாக விற்பனை செய்தும் வந்துள்ளனர்.

இவ்வாறு மனித பாவனைக்கு உதவாத பொருள்களை விற்பனை செய்பவர்கள் தொடர்பில் 1926 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு மக்கள் தகவல் வழங்க முடியும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். (க-இ)

## இயல்பு நிலையில் நீர்தேக்க நீர்மட்டம்



கொழும்பு, டிசெ.10
நாட்டில் உள்ள அனைத்து நீர்த் தேக்கங்களின் நீர் மட்டங்களும் இயல்பு நிலைக்கு திரும்புகின்றன என்று நீர்ப்பாசனத்துறை தெரிவித்துள்ளது. நீர்ப்பாசனத் துறையின் அளவீட்டு நிலையங்களின் தரவுகளின்படி, எந்த நீர்த் தேக்கமும் வெள்ள மட்டத்தில் இல்லை என்று நீர்ப்பாசன பணிப்பாளர், நீரியல் மற்றும் பேரிடர் மேலாண்மை பொறியாளர் எல்.எஸ். சூரிய பண்டார தெரிவித்துள்ளார்.

கடந்த 24 மணி நேரத்தில் பல பிரதான நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதிகளில் அதிகபட்சமாக 50 முதல் 100 மி.மீ மழை பதிவாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## பேருந்து மோதியதில் மூதாட்டி படுகாயம்

### சாரதி தலைமறைவு

யாழ்ப்பாணம்,டிசெ.10
யாழ்ப்பாணம் கொடிகாமம் இடையே குறுந்தூரச் சேவையில் ஈடுபடும் பேருந்து மோதி,மூதாட்டி படுகாயமடைந்துள்ளார். பேருந்தைச் செலுத்திச் சென்ற சாரதி தப்பியோடியுள்ளார். இந்த விபத்து நுணாவில் 190 ஆம் கட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. விபத்தில் நுணாவில் வேலாயுதம் வீதியைச் சேர்ந்த 60 வயதான பெண் படுகாயமடைந்துள்ளார். தலை மற்றும் உடல் பகுதியில் படுகாயமடைந்த பெண், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்தை அடுத்து பேருந்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார். பேருந்து சாவகச்சேரிப் பொலிஸாரால் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. [illegible]




## உண்மையை அமத்தி வாசியுங்கோ!

ஏற்கனவே இஞ்ச வெள்ளம் எட்டிப்பார்த்ததுக்கே 25 ஆயிரம் குடுபடப்போகுது எண்டு பிரச்சினை ஓடிக்கொண்டிருக்கேக்க, உண்மையாவே பாதிக்கப்பட்ட ஆக்களைப் பதிவு செய்யேலை எண்டு கனபேர் முறைப்பாடு செய்யத் தொடங்கிட்டினம். இந்தமுறை கன இடங்களில வெள்ளம் வீடு வளவுகளுக்கு வந்து வாசலோட முட்டிக்கொண்டு நிண்டது. சிலபேரின்ர வீடுகளுக்குள்ள மட்டும் அது கொஞ்சம் புகுந்தது. இன்னும் சில இடங்களில காத்தடிச்சு 'சீற்' கழண்டு பறந்தது. சில வீடுகளுக்கு மேல மரங்கள் முறிஞ்சு விழுந்தது. அதைத்தவிர பெரிய பாதிப்பு இல்லைத்தான். ஆனால் காணிக்குள்ள காலளவு தண்ணி வந்தவைக்கே நிவாரணம் குடுக்க வெளிக்கிடேக்க, காத்தடிச்சு வீட்டின்ர 'சீற்' பறந்தவைக்கும், வீட்டுக்குள்ள வெள்ளம் புகுந்தவைக்கும், வீடுகளுக்கு மேல மரம் முறிஞ்சு விழுந்து கஷ்டப்பட்டவைக்கும் நிவாரணம் இல்லையெண்டு சில ஜீ.எஸ்.மார் கைவிரிக்கினமாம்.

அதோட அவையள் உந்த நிவாரணத்தை ஆருக்கெல்லாம் குடுக்கலாம் எண்டு அரசாங்கம் அறிவிச்ச சுற்றுநிருபத்தை விடவும் தாங்களும் சில 'ரூல்ஸ்' போடுகினமாம். "வெள்ளம் வந்து 24 மணித்தியாலத்துக்குள்ள அறிவிக்கேலை", "உத்தியோகத்தர்மாருக்கு இல்லை", "கொட்டில் வீட்டில இருக்கிற அரசாங்க உத்தியோகத்தர்களுக்குத்தான் கொடுப்பனவு", "லிஸ்ட் முதலே அனுப்பிட்டம்", "இனிப் பதியேலாது" எண்டெல்லாம் ஜீ.எஸ்.மார் சாக்குப்போக்குச் சொல்லி உண்மையாவே பாதிக்கப்பட்டவையை திருப்பி அனுப்புகினமாம். பாதிக்கப்படாத ஆக்களுக்கு நிவாரணம்வாங்கிக்குடுக்கிறதிலகாட்டிறமும்முரத்தையும், ஈடுபாட்டையும் இப்பிடி உண்மையாவே பாதிக்கப்பட்டவைக்கும் காட்டினால் நல்லதெல்லோ.

ஆனால் எல்லா ஜீ.எஸ்.மாரும் அப்பிடியில்லை.மனச்சாட்சிப்படி வேலை செய்யிறவையும் இருக்கினம் தான். பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேர போய்ப்பாத்தால் தானே ஆருக்கு நிவாரணம் குடுக்கலாம், ஆருக்கு குடுக்கத் தேவையில்லை எண்ட உண்மை தெரியவரும். அதை விட்டிட்டு ஒப்பீஸிலையே முட்டை போட்டுக்கொண்டிருந்தால், கைக்கணக்கிலதான் பாதிக்கப்பட்டவையின்ர எண்ணிக்கையைப் போடவேண்டிவரும். அதோட இந்தமுறை ஜீ.எஸ்.மார் முதலில வழமைபோல எங்கையெல்லாம் வெள்ளம் நிண்டிச்சோ அந்த இடங்களில இருக்கிற குடும்பங்களின்ர எண்ணிக்கையை குடுத்திருக்கினம். ஆனால் அதைவைச்சு நிவாரணம் குடுப்பினம் எண்டோ, 25 ஆயிரம் குடுப்பினம் எண்டோ அவைக்குத் தெரியாது. அதைச் சொல்லியிருந்தால், அந்தக் கொடுப்பனவுக்குத் தகுதியான, உண்மையாப் பாதிக்கப்பட்டவையை மட்டும் பதிஞ்சு குடுத்திருப்பினம். ஆனால் பழக்கதோசத்தில காணிக்குள்ள வெள்ளம் நிண்ட பாதிப்பை ஜீ.எஸ்.மார் பதிஞ்சு குடுக்க,அதை வைச்சுக்கொண்டு மேலிடத்துக்கு அனுப்பி 36 கோடியை வாங்கியிருக்கினம். ஆனால் இப்ப சில ஜீ.எஸ்.மார் தங்கட தரவுகளில இப்பிடியொரு சிக்கல் இருந்ததை உணர்ந்து, தங்கட இடங்களில உண்மையாப் பாதிக்கப்பட்டவையின்ர எண்ணிகையையும், சில இடங்களில பாதிப்பே இல்லை எண்டதையும் தங்கட மேலதிகாரிமாருக்கு எழுத்தில போட்டிருக்கினமாம். ஆனால் மேலதிகாரிமார் அதைக் கேக்கினமில்லை. "உந்த விசயத்தை இப்பிடியே அமத்தப் பாருங்கோ. இனி பாதிப்பைக் குறைச்சுக் காட்டினால் திசைகாட்டிக்காரர் கோபிப்பினம்" எண்டு சொல்லி ஜீ.எஸ்.மாரின்ர வாயை அடைச்சு, அரசாங்கத்துக்கு தாங்கள் முதல் அனுப்பின பாதிப்புக் கணக்குக்கு பங்கம் வராமல் பாக்கினமாம். நேர்மைக்கு மகுடமெண்டு விருது வாங்கினால் மட்டும் காணாது. அந்த விருதுக்கு ஏத்தபடி உண்மையா நடக்கவுமெல்லோ வேணும்.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர்ச்செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சிதரும் செய்தி வந்துசேரும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு தாயின் தேவைகளை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடி முடியும்.

**மிதுனம்:** சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் அனுகூலமாக முடியும். கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் தொடர் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்ச்செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். தந்தைவழி உறவுகளால் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முடிவுகளை பிற்பகலுக்கு மேல் மேற்கொள்வது சாதகமாக முடியும். பிற்பகலுக்குமேல் தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்துசேரும்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு சகோதரர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள்.

**விருச்சிகம்:** மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு:** மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக் கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு சலசலப்புகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சிலருக்கு பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ள நேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளுக்காக செலவு செய்யவேண்டிவரும்.

**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவு செய்ய வேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் உறவினர் வீட்டு விசேஷத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது. உறவினர்கள் வருகையால் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டிவரும்.



## மூத்த கூட்டுறவாளர் தம்பிராசா கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூத்த கூட்டுறவாளர் சி.க.தம்பிராசா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் நினைவுதினம் வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றபோதே அவர் கௌரவிக்கப்பட்டார். (ச-17)

## கசிப்புக் காய்ச்சுமிடம் பளையில் முற்றுகை

யாழ்ப்பாணம் டிசெ.10
பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் கசிப்புக் காய்ச்சுமிடம் ஒன்று கடந்த வியாழக்கிழமை முற்றுகையிடப்பட்டது.
பளை கோவில்வயல் கிராமஅலுவலர் பிரிவிலுள்ள சாவுத்தி எனும் இடத்தில் கசிப்புக் காய்ச்சப்படுவதாகக் கிடைக்கப்பட்ட தகவல்களுக்கமைய பொலிஸாரால் மேற்கோள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் இந்தக் குற்றச்செயல் முறியடிக்கப்பட்டது.
இதன்போது 20 லீற்றர் கசிப்பு, கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. அத்துடன் தப்பிச்சென்ற சந்தேக நபர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-41-9)

## கலைநிகழ்வும் கௌரவிப்பும்

யாழ்ப்பாணம்.டிசெ.10
யாழ்ப்பாணம்,திருநெல்வேலி 'லிற்றில் மாஸ்டர்ஸ் பிறீஸ்கூல்' ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலைகளின் கலைநிகழ்வும், மாணவர் கௌரவிப்பும் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் இயக்குநர் கி.சதீஸ்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக செயலர் க.சிவகரன், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள மாகாணக் கணக்காளர் திருமதி.சி.நிஷாந்தி ஆகியோர் கலந்து கொள்வர். (க-இ)



## பரந்தன்-முல்லை பாலம் புனரமைப்பு இந்தியத் தூதரகத்தினர் நேரில் ஆராய்வு

கிளிநொச்சி,டிசெ.10
கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ -35 பரந்தன் முல்லைத்தீவு பிரதான வீதியின் 11 ஆம் மைக்கல் பகுதியில் அமைந்துள்ள பிரதான பாலத்தின் அபிவிருத்திப் பணிகளை, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் குழுவினர் நேற்றுப் பார்வையிட்டனர். வெள்ள இடரில் சிதைவடைந்த இந்தப் பாலத்தை இந்திய இராணுவத்தினரின் பங்களிப்புடன், இலங்கை இராணுவத்தினர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இணைந்து புனரமைப்புச் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-113)



நீர்வேலித் தெற்கு முதியோர் சங்கம் நடத்திய, சர்வதேச முதியோர் தினத்தில், பொதுச் சங்கத்தின் 30 முதியவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (க-17)

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம்,டிசெ.10
நல்லை நகர் ஆறுமுகநாவலரின் குருபூசை தினம் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் திருமுறை பாராயணம், வரவேற்புரை, சிறப்புரை என்பன இடம்பெறவுள்ளன. (க-17)

## கலைமலர் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம்.டிசெ.10
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலைமலர் சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வு நாளை புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா கலந்து கொண்டு மலரை வெளியீட்டுவைக்கவுள்ளார். மலராசிரியர் விரிவுரையாளர் வே. சேந்தன் மலர்தொடர்பான அறிமுகவுரையை ஆற்றுவார். (க-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

முக்கியமானது எது, நாம் எண்ணுவது எது,
அறிவது எது, நம்புவது எது என்பதல்ல.
செய்வது எது என்பதொன்றே மிக முக்கியமானதாகும்.

– ஜோன் ரஸ்கின் –

# இடரிலிருந்து மீள நேர்மையும் தேவை!

இலங்கை முழுவதும் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீட்பு நடவடிக்கைகளும், நிவாரண நடவடிக்கைகளும் முழுவீச்சில் முன்னெடுக்கப்படுகின்றன. இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் தாராளமாக நிவாரணங்களையும், நிதியுதவிகளையும் அறிவித்திருக்கின்றது. பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள அதிகாரிகளின் ஊடாக பாதிக்கப்பட்ட மக்கள் இனங்காணப்பட்டு நிவாரணங்களும், நிதியுதவிகளும் வழக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரசாங்கத்தின் உதவிகள் வழங்கப்படும் விதம் தொடர்ச்சியாக விமர்சனங்களைச் சந்தித்திருக்கின்றது. ஒப்பீட்டளவில் சேதங்கள் குறைவாகவுள்ள யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகளவு குடும்பங்கள் இழப்பீட்டுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்ற குற்றச்சாட்டும், இழப்பீடு வழங்கலில் அரசியல் எண்ணங்கள் மறைந்திருக்கலாம் என்ற சந்தேகமும் பரவியிருக்கின்றது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைச் சுத்தம் செய்வதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு 36 கோடி ரூபா ஒதுக்கப்பட்டதிலிருந்து இந்த விமர்சனங்கள், சந்தேகங்கள் வெளிக்கிளம்பியிருந்தன.இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களும், உதவித்தொகைகளும் கிடைக்க வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக் கருத்தும் கிடையாது. வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்படைந்த அனைவரும் இந்த நிவாரணங்களுக்கும், உதவித் தொகைகளுக்கும் உரித்துடையவர்கள். ஆனால் அவை உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களையே சென்றடையவேண்டும். ஆனால் பாதிப்புகளை எதிர்கொள்ளாதவர்களுக்கு இவை வழங்கப்படும்போது, எங்கோ ஓரிடத்தில் இந்த இழப்பீடுகளுக்கும், உதவிகளுக்கும் உரித்துடைய ஒருவர் பாதிக்கப்படுவார் என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

நல்லூர்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அலுவலர்கள் இந்த விடயத்தில் முன்மாதிரியாக நடந்துகொண்டிருக்கின்றனர். 16 கிராம அலு வலர்கள் தங்களின் பிரதேசங்களில் பெரும் வெள்ள அழிவுகள் ஏற்படவில்லை என்றும், வீடுகளைச் சுத்தம் செய்வதற்கான 25 ஆயிரம் ரூபாவுக்கு உரித்துடையவர்கள் இல்லை என்றும் கூட்டாகக் கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கின்றார்கள். கிராம அலுவலர்கள் என்ற ரீதியில் தங்கள் பகுதிகளில் நேரடியாக ஆய்வுகளை மேற்கொள்ளக்கூடியவர்கள் என்ற வகையில் அவர்கள் இந்தக்கடிதத்தை அனுப்பியிருக்கின்றார்கள். ஒவ்வொரு கிராம அலுவலரும் தங் கள் பகுதியில் உண்மையாகவே பாதிக்கப்பட்டவர்களை இனங்கண்டு அவர்களுக்கான உதவிகள் கிடைப்பதற்கான வழிவகைகள் செய்வது எந்தளவு முக்கியமானதோ, அதேபோன்று பாதிப்புகள் இல்லாவிட்டால் அதை அறிக்கையிடுவதும் அவசியமானது. அதையே மேற்குறிப்பிட்ட கிராம அலுவலர்கள் செய்திருக்கின்றனர்.

நாட்டில் பெரும் இடர் நிலைமை ஏற்பட்டிருக்கும் இந்த இக்கட்டான நிலைமையில், அனைவரும் பொறுப்புடன் செயற்படுவது அவசியம். அவ்வாறு பொறுப்புணர்ந்து செயற்படுவோரைத் தட்டிக் கொடுக்கவேண்டியது கட்டாயம். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை. களத்தில் பொறுப்புணர்ந்து செயற்படுபவர்கள் கதிரைகளில் இருப்பவர்களால் கேள்விக்குட்படுத்தப்படும் நிலைமையே இருக்கின்றது. இந்த நிலைமை மாறவேண்டும். பதவிக்கதிரைகளில் இருப்பவர்கள்முதல் சாதாரண குடிமகன் வரை பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும். இதயசுத்தியுடன்- நேர்மையுடன் - நடக்கவேண்டும். நெருக்கடி நிலைமையில் இருந்து மீண்டெழுவதற்கு இதுவும் அவசியம்.




# அனர்த்தத்தால் மனஅழுத்தம் 1926க்கு அழையுங்கள்



**கொழும்பு, டிசெ.10**
**அனர்த்தங்கள் காரணமாக மன அழுத்த நிலைமைகள் ஏற்பட்டிருப்பின் தேசிய மனநல நிறுவகத்தின் 1926 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.**

அனர்த்த நிலையின் பின்னர் அது எமது மனதை நேரடியாகப் பாதிக்கக்கூடும். அதன் காரணமாக மக்களிடையே மன அழுத்தம் ஏற்படுவது சாதாரணமாகக் காணக்கூடிய ஒன்று நீங்கள் அத்தகைய அழுத்தத்திற்கு ஆளாகியிருந்தால், முதலில் பிரச்சினையை அடையாளம் காண வேண்டும் . அந்தப் பிரச்சினைக்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தீர்வைக் கண்டறிய வேண்டும்.

உதாரணமாக, அவர்களுக்கு விளையாடுவதற்கான சூழலை இயன்றவரை உருவாக்கிக்கொடுத்தல், நண்பர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற விடயங்களைச் செய்ய முடியும் எனவும் சுகாதாரப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# மியான்மர் அரசால் 100,000 டொலர்கள்

கொழும்பு, டிசெ.10
மியான்மர் குடியரசினால் இலங்கை அரசாங்கத்துக்கு அவசர நிவாரணமாக 100,000 அமெரிக்க டொலர் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.
மியான்மர் தூதுவர் மர்லர் தான் ஹ்டைக்கினால் வெளிநாட்டு அலுவல்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாக இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டது. (ச-இ)

# இலஞ்சம் பெற்ற அரசஅதிகாரி கைது

கொழும்பு, டிசெ.10
இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் அண்மையில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
தனியார் காப்புறுதி நிறுவனத்திடம் இருந்து இலஞ்சம் பெற்றுக் கொண்டு உத்தியோக பூர்வ வாகனப் பரிசோதனை அறிக்கைகளை வழங்கியமை தொடர்பான தொடர்ச்சியான விசாரணையின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு நிதி இழப்பையும் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# பூட்டான் நிதியுதவி

கொழும்பு, டிசெ.10
அனர்த்தப் பேரழிவுகளிலிருந்து இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்காக இலங்கை அரசாங்கத்துக்குப் பூட்டான் அவசர நிவாரணமாக 200, 000 அமெரிக்க டொலரை நேற்று அன்பளிப்புச் செய்தது.
பூட்டானின் தூதுவர் கர்மா ஹமு டோர்ஜினால் வெளிநாட்டு அலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்திடம் இந்த நிதியுதவி கையளிக்கப்பட்டது. (ச-இ)



# பண்டாரநாயக்க நிதியத்தால் ரூ.250 மில்லியன் கையளிப்பு!

கொழும்பு, டிசெ.10
அரசாங்கத்தின் நிவாரண நிதிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியம் 250 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.
இந்த நிதியை பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கையளித்துள்ளார். இதன்போது புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிந்தும சுனில் செனவி மற்றும் பண்டாரநாயக்க ஞாபகார்த்த தேசிய நிதியத்தின் பணிப்பாளர் சபையின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை - கார்த்திகை 26
11.12.2025
சுபநேரம் : 01.49 - 03.19
ராகுகாலம் : 07.49 - 09.19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் மாநகரசபை

## கேள்வி அறிவித்தல்

### திரவக் கழிவகற்றல், கட்டணக் கழிவகற்றல் சேவைகளுக்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2026

01. யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் மக்களுக்கு இடையூறு இல்லாமல் உரிய வாகனத்தில் திரவக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்குக் கொண்டு சென்று கழிவகற்றுவதற்காக ஒரு வருட காலத்திற்கு (01.01.2026 – 31.12.2026) தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து யாழ் மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட இருநூற்றைம்பதுக்கும் (250) அதிகமான தனியார் கடைகள், விடுதிகள் ஆகியவற்றிலிருந்து தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை (உணவுக் கழிவுகள், உக்கக்கூடியவை, பொலித்தீன், பிளாஸ்ரிக், கண்ணாடி) மக்களுக்கு இடையூறு இல்லாமல் வாகனத்தில் மூடியமுறையில் பாதுகாப்பாக முறையில் அகற்றி காக்கைதீவு மற்றும் கல்லுண்டாயில் அமைந்திருக்கும் கழிவு சேர் நிலையத்திற்கு கொண்டு சென்று கழிவகற்றுவதற்காக ஒரு வருட காலத்திற்கு (01.01.2026 – 31.12.2026) தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து யாழ் மாநகரசபை பிராந்திய பெறுகைக்குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி சேவைக்கு தகுதியானவர்கள் 10.12.2025 – 23.12.2025 வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் மு.ப 9.00 - பி.ப 2.00 மணி வரை இல 01, இல 02 ஒவ்வொரு சேவைக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 1,000.00 +வற்வரி 18% (ரூபா. 1,180.00) இனை பணமாகச் செலுத்தி பெறுகை முகாமைத்துவப் பிரிவில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களை தொலைபேசி இல – 0212222275, மின்னஞ்சல் முகவரி – **mcjaffnamailv@yahoo.com** மூலம் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்களை 23.12.2025 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக **தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு நேரில் / பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"திரவக் கழிவகற்றல் / கட்டணக் கழிவகற்றல் சேவைக்கு வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல் - 2026"** என தவறாது குறிப்பிடப்படல் வேண்டும். (01 ஆம் 02 ஆம் இலக்கமிடப்பட்ட சேவைகளுக்கு விண்ணப்பிக்கும்போது தங்களால் தெரிவு செய்யப்படும் சேவைக்கான விண்ணப்பங்களை தனித்தனியாக கடித உறைகளில் இட்டு விபரம் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்)

கேள்விகள் 23.12.2025 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
பிராந்திய பெறுகைக்குழு,
யாழ்ப்பாணம்

(CR 46673) A


# வெள்ளவாய்க்காலை சீர்செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.10

வண்ணார்பண்ணை பிரப்பங்குளம் வீதியில் அமைந்துள்ள வெள்ளவாய்க்காலில் கடந்த ஒரு மாதமாக வெள்ளம் தேங்கியுள்ளது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலமுறை முறைப்பாடுகள் வழங்கியும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறை பிரதானவீதி வழியாக வழிந்தோடும் வெள்ளம். இந்த வாய்க்கா லில் தேங்கி நிற்கின்றது.

இதனால் நுளம்புப் பெருக்கமும் அதிகரித் துள்ளது. எனவே உரிய அதிகாரிகள் வெள்ளத்தை வழிந் தோடச்செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-இ)

# மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற 12 ஆயிரம் கிலோ இறைச்சி மீட்பு

## கால்நடைப்பண்ணைக்குச் 'சீல்'

அநுராதபுரம், டிசெ.10

அநுராதபுரம் மாவட்டத்தில், கால்நடைப் பண்ணையொன்றில் சேமித்துவைக்கப்பட்டிருந்த, மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற, சுமார் 12 ஆயிரம் கிலோகிராம் இறைச்சி மீட்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பண்ணைக்கும் 'சீல்' வைக்கப்பட்டுள்ளது. சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் பேரிடர் மேலாண்மை அவசர இலக்கத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, அதிகாரிகள் பண்ணையில் சோதனை மேற்கொண்டனர். சீரற்ற காலநிலை மற்றும் மின்தடையால் அங்கு சேமித்துவைக்கப்பட்டிருந்த இறைச்சி மனித நுகர்வுக்குப் பொருத்தமற்றதாக மாறியுள்ளது. இறைச்சியின் மாதிரிகள் அரச ஆய்வாளர் சோதனைக்கு அனுப்பப்படும் என்று பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் பொரலெஸ்ஸா தெரிவித்துள்ளார். (க-இ)


## மணிவிழா வாழ்த்து



Best Wishes

Congratulations

எமது பாடசாலையில் அதிபராக கடமையாற்றி
அறுபதாவது அகவை காணும்

### திருமதி அற்புதராணி கிருஷ்ணகுமார்
### (SLPS - I)

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய
வாழ்த்துகின்றோம்.

சேவைக்காலம் :

- மு/அணிஞ்சியன்குளம் அ.த.க.பா - 16.03.1990 - 01.05.1990 ஆசிரியர்
- மு/பழையமுறிகண்டி அ.த.க.பா - 02.05.1990 - 26.08.1999 ஆசிரியர்
- மு/கரிப்பட்டமுறிப்பு அ.த.க.பா - 27.08.1999 - 22.02.2001 ஆசிரியர்
- மு/ஐயன்கன்குளம் மகாவித்தியாலயம் - 23.02.2001 - 15.09.2002 ஆசிரியர்
- மு/பழையமுறிகண்டி அ.த.க.பா - 16.09.2002 - 10.01.2016 அதிபர்
- மு/கோட்டை கட்டியகுளம் மகாவித்தியாலயம்- 11.01.2016 - 09.12.2025 அதிபர்


**வாழ்த்துவோர்:**

பாடசாலைச் சமூகம்
மு/ கோட்டைகட்டியகுளம் ம.வி
அக்கராயன்

(CS/60128) J-1



## முதலாம் ஆண்டு நினைவில் ஆறாம் ஆண்டு நினைவில்





மண்ணுலகில் 10.04.1939 விண்ணுலகில் 21.11.2024

மண்ணுலகில் 10.07.1946 விண்ணுலகில் 27.06.2019

அமரர்
**ஆழ்வான் சதாசிவம்**
(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)

அமரர்
**தங்கமணி சதாசிவம்**

" நீரினது குமிழி இது நில்லாது போகும்" என்று
நிலையாமையை எமக்கு உணர்த்தி
நித்திய வாழ்வு தான் நின்மதி என்று
படைத்தவரை நோக்கிச் சென்றீர்களோ இருவரும்.
எத்தனை காலம் தான் சென்றாலும்
எம்மோடு நீங்கள் இருந்து
எங்களை ஆசீர்வதியுங்கள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவுகளால் துயருறும்

அன்பான பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

நாவற்காடு,
வரணி.

(CS 46671) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்வளத்தைச் சுரண்டிவிட்டு தானம் செய்கின்றது இந்தியா!

## இலங்கைக் கடலோடிகள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

இலங்கையின் பலகோடி ரூபா பெறுமதி யான வளங்களைச் சூறையாடும் இந்தியா மறுபுறம் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பிச்சை இடுகின்றது என்று இலங்கைக் கடலோடிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளரான அண்ணாமலை தெரிவித்துள்ளார். வடமராட்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டித்வா பேரிடரால் இலங்கையின் பல பகுதிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல சர்வதேச நாடுகள் இலங்கைக்கு பல உதவிகளை வழங்கி வருகின்றன. இந்தியாவும் பல மனிதாபிமான உதவிகளை வழங்கி வருகின்றது.

எமது கடல்வளத்தைச் சுரண்டி பல கோடிக்கணக்கான பணத்தைச் சம்பாதித்த பின்னர் அதில் ஒரு பகுதியையே தானமாக வழங்குகின்றது. தாமும் கொடையாளி என்று சர்வதேசத்துக்குக் காண்பிக்கின்றது. எமது வளத்தைச் சூறையாடுவதை இந்தியா நிறுத்த வேண்டும். இது தொடர்பில் எமது அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (க-27)

# வாகரைக் கடற்கரையில் உருக்குலைந்த சடலம்

திருமலை,டிசெ.10

திருகோணமலை வாகரைக் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கரையொதுங்கியுள்ளது. சுண்டிக்குளம் சாலைக் கடற்கரையில், கடந்த சில நாள்களுக்கு முன்பு கடற் படையினர் ஐவர் தொடுவாய் வெட்டச் சென்றபோது, காணாமற்போயிருந்தனர். இவர்கள் பல நாள்களாகத் தேடப்பட்டு வருகின்றனர். இந்தநிலையில்உருக்குலைந்த சடலம் கரையொதுங்கியுள்ளது. சடலத்தை அடையாளம்காணும்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க-இ)


## INVITATION FOR BID (IFB)
## Provincial High Court
## Northern Province - Jaffna
## Procurement of Cleaning and Sanitary Services – 2026

1. The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna now invites sealed bids from eligible and qualified bidders, who have at least service station or branch in Jaffna District, for the service mentioned below in the schedule.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB).
3. Interested bidders may obtain further information from the Procurement Unit, Provincial High Court, Jaffna (Financial Branch) and inspect the Bidding Documents at the same address on any working day from 9.00 a.m to 3.00 p.m from 10.12.2025
   Contact numbers are
   Phone : 0212222582/0212226388
   Facsimile: 0212222582/0212226388
4. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on submission of a written application to the Procurement Unit, Provincial High Court, Jaffna from 10.12.2025 to 29.12.2025 from, 9.00 a.m to 3.00 p.m upon the payment of a non- refundable fee as described in the schedule below.
5. Sealed bids shall be sent by registered post addressed to the The Chairman, High Court Procurement Committee, Northern Province Jaffna or deposited in the Tender Box available at the Procurement Unit, High Court Jaffna on or before 30.12.2025 3.00 p.m. Late bids will be rejected. Bidders should write the service description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at 3.00 p.m. on the same day (30.12.2025) in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately for each Court.
6. Bid shall be valid for a period of 77 days from the last date (30.12.2025) fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for 105 days from the bid opening.
7. Procurement Committee will keep the right to make final decision about accept or reject Bids and it will be the final decision regarding the bids.
8. The details of the bids are given overleaf:

| S.No | Bid ID. | Description of Service | Estimated Amount (million) (Excluding VAT) | Required Bid Security | | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| | | | | Security Amount (Rs.) | Vaild Period Until | |
| 01 | HCJ/PROC/ Serv. (Clean)/01/ 2025 | Cleaning Service for Courts Complex Jaffna | 7.6 | 25000/- | 14.04.2026 | 2000/- |
| 02 | HCJ/PROC/ Serv. (Clean)/02/ 2025 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Mallakam | 4.9 | 25000/- | 14.04.2026 | 2000/- |
| 03 | HCJ/PROC/ Serv. (Clean)/03/ 2025 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Point Pedro | 3.8 | 25000/- | 14.04.2026 | 2000/- |
| 04 | HCJ/PROC/ Serv. (Clean)/04/ 2025 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Chavakachchery | 4.2 | 25000/- | 14.04.2026 | 2000/- |
| 05 | HCJ/PROC/ Serv. (Clean)/05/ 2025 | Cleaning Service for District and Magistrate's Courts Complex Kayts | 4.2 | 25000/- | 14.04.2026 | 2000/- |
| 06 | HCJ/PROC/ Serv. (Clean)/06/ 2025 | Cleaning Service for Juvenile Magistrate's Court Jaffna | 1.5 | 25000/- | 14.04.2026 | 2000/- |

9. Pre bid meeting will be held at Provincial High Court Jaffna, on 23.12.2025 at 9.00 a.m.

The Chairman,
High Court Procurement Committee
Provincial High Court
Northern Province, Jaffna

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்
தொடர்பு: 077 3341 281
(CR 46668) A

## பெயர் மாற்றம்

37 கண்டுவில் ஒழுங்கை சாவகச்சேரியில் வசிக்கும் **வேலுப்பிள்ளை றஞ்சிதமணி** ஆகிய நான் எனது பெயரை **வேலுப்பிள்ளை பராசக்தி** என மாற்றம் செய்கின்றேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**வேலுப்பிள்ளை பராசக்தி**
(CR 46672) A

## வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் **விற்பனையாளர்** தேவை.
மேலும், **சிட்டை எழுதுனர்** ஆண், பெண் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: **076 028 9835**
**077 590 6482**
(CR 46667) A

## பிறந்தநாள் வாழ்த்து




இன்று (10.12.2025) புதன்கிழமை
60 வது பிறந்தநாளைக் கொண்டாடும்
**பொன்னுத்துரை சந்திரகுமார்**
அவர்களை வாழ்த்துவதோடு அவர்களின் வாழ்க்கை சீரும் சிறப்புமாக இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*வாழ்த்துவோர்:* செ. கெங்காவரதன் (மைத்துனன்)

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

எமது சபையின் தலைமை அலுவலகத்தில் அனர்த்த காலத்தில் வீதியில் வெட்டப்பட்ட மரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

காலம் : 17.12.2025 புதன்கிழமை காலை 10.30 மணி
இடம் : தலைமை அலுவலகம், வலி தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

ஆர்வமுடைய கேள்விதாரர்கள் மீளளிக்க முடியாத கட்டணம் ரூபா 500.00 இனை ஏலவிற்பனை தினத்தன்று மு.ப. 10.30மணிக்கு முன்பாக தலைமை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சித்திபெறும் கேள்விதாரர்கள் உடனடியாக முழுப்பணத்தினையும் செலுத்தி மரத்துண்டங்களை அப்புறப்படுத்தல் வேண்டும். குறித்த ஏலத்தில் விடப்படும் மரத்துண்டங்கள் சபையின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் மேலதிக தகவல்களுக்கு 0212240017 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

தி.பிரகாஷ்
தவிசாளர்.
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.
சுன்னாகம். 10.12.2025
(CR/46675)J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான தீர்வுக்கு ஒற்றுமை காலத்தின் தேவை

## சித்தார்த்தன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம்,டிசெ.10**
**காலத்துக்குக்காலம் தமிழ்மக்கள் ஏமாற்றப்படாமல், அவர்கள் எதிர்பார்க்கும் தீர்வொன்று கிடைக்கவேண்டுமெனில், மக்களதும், சர்வதேச நாடுகளதும் விருப்பத்துக்கேற்ப தமிழ்க்கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.**

இலங்கைத் தமிழரசுக்கட்சிக்கும், ஜனநாயகத் தமிழ்தேசியக் கூட்டணிக் கும் இடையிலான சந்திப்பு மற்றும் அடுத்தகட்ட அரசியல் நகர்வுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியத்துடன் செயற்படும் அனைத்துத் தமிழ்க்கட்சிகளையும் இணைத்துச் செயற்படுத்துவதை நாம் விரும்புகின்றோம்.

அதற்காக ஏற்கனவே இணைந்து செயற்படும் கட்சிகளுடன் கலந்துரையாடி வருகின்றோம். நாடாளுமன்றத் தேர்தலுக்கு அப்பால் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மாற்றுக்கட்சிகளை ஆதரித்தவர்களின் மன வெளிப்பாடு கள் தொடர்பாக மக்கள் அதிருப்தியடை துள்ளனர்.

இவ்வாறான சூழலில் அடுத்த கட்ட நகர்வுகளை, மக்களின் தேவைகளை நாம் நிறை வேற்றுவதற்கு, நாங்கள் முதலில் ஒன்றிணையவேண்டும். தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றி ணைந்து ஒரே குடையின் கீழ் செயற்படவேண்டும் என்ற நிலையை உரு வாக்க வேண்டும். பிரிந்து நிற்பதால், எதையும் சாதிக்கப் போவதில்லை. நாம் பிரிவது மாற்றுச் சக்திக ளுக்குச் சாதமாக மாறிவிடும் - என்றார். (க-இ)

## நுவரெலியா மாவட்டத்தின் விவசாய அழிவு தொடர்பில் அநுர தலைமையில் கூட்டம்

கொழும்பு, டிசெ.10
நுவரெலியா மாவட்டத்தில் இயற்கை இடரால் விவசாயத் துறைக்கு ஏற்பட்ட சேதம் தொடர்பாக ஆராய்வதற்காகவும், எடுக்கப்பட வேண்டிய அவசர நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகவும் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக ஆயிரத்து 421 ஹெக்ரெயர் காய்கறிச் செய்கைகள் சேதமடைந்துள்ளன. விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (எ-இ)

## ஐ.நா.வின் உதவிகள் நேற்றுக் கையளிப்பு

கொழும்பு, டிசெ.10
இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஐக்கிய நாடுகள் சபையின் உடனடி உதவி நிதியத் தின் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ள 4.5 மில்லியன் டொலர் நிதியுதவி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சேவால் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரான்சேவுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது நாட்டின் சமகால நிலைவரம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இடரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு அவசியமான நிவாரண உதவிகளை வழங்குவதிலும், நாட்டை மீளக்கட்டியெழுப்புவதிலும் அவசியமான முழுமையான ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும் என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி உறுதியளித்துள்ளார். (எ-இ)

## 79 குடும்பங்கள் வவுனியாவில் முகாம்களில்!!

கொழும்பு, டிசெ.10
வவுனியாவில் ஏற்பட்ட வெள்ளப்பாதிப்பினால் 79 குடும்பங்களைச் சேர்ந்த 232பேர் தொடர்ச்சியாக இடைத் தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளப்பேரிடர் காரணமாக வவுனியா மாவட்டத்திலும் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன.

வெள்ளம் காரணமாக மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மொத்தமாக 58இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த னர். தற்போது மழைவீழ்ச்சி குறைவடைந்த நிலையில முகாம்களில் இருந்த மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பியிருந்தனர்.

இருப்பினும் கடுமையான பாதிப்புக்களைச் சந்தித்த வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று இடைத்தங்கல் முகாம்கள் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வருவதுடன் அங்கு 79 குடும்பங்களைச் சேர்ந்த 232 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)


4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13.03.1956
மறைவு 10.12.2021

அமரர்
இராசையா இரத்தினேஸ்வரி
திதி:10.12.2025

நான்கு ஆண்டுகள் கடந்தும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் என்றும் நிறைந்திருக்கும்
உங்கள் வாழ்க்கை ஒரு பாடமாக
எங்களுக்கு அமைய
உங்கள் ஆசி கிடைக்கட்டும்.

குடும்பத்தினர்

மரண அறிவித்தல்

தோற்றம் 02.08.1949
மறைவு 09.12.2025



திருமதி திலகவதி திரவியம்
(சங்கானை)

குளத்தடி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி திரவியம் அவர்கள் நேற்று (09.12.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனகசபை திரவியம் (முன்னாள் செயலாளர், வலி-மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அருமை மருமகளும், நிமல்ராஜ் (தேர்தல் திணைக்களம், யாழ்ப்பாணம்), நிமல்ராஜி (குடும்பநல உத்தியோகத்தர், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சண்டிலிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சத்தியா, திருமுருகன் (யாழ். தினக்குரல்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சானுகா, அபிநயன், சஞ்ஜீவன், லிஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகேஸ்வரி, பூமணி (கனடா), மஞ்சுளாவதி, கிருஸ்ணதாசன் (மதுபானசாலை, சங்கானை) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலட்சுமியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குளத்தடி வீதி,
சங்கானை.

தகவல் :
தி.நிமல்ராஜ் (மகன்)
077 4367 939

(CS 30881) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொடலிங் துறையில் யாழ். இளைஞன் சாதனை

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த ஹரன் ரமின்ஷன் என்ற இளைஞன் மொடலிங் துறையில் சாதனையீட்டியுள்ளார்.

கடந்த நவம்பர் மாதம் பிலிப்பைன்ஸ் மணிலா நகரில் நடைபெற்ற MISTER GLAM INTERNATIONAL 2025 போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த இளைஞன் பங்குபற்றி முதல் 10 இடங்களுக்குள் தெரிவாகி இரண்டு பதக்கங்களை தனதாக்கியுள்ளார். இந்தப் போட்டியில் கனடா, லண்டன், மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், ஜேர்மன், பிலிப்பைன்ஸ், ஜப்பான் என 35க்கும் மேற்பட்ட நாடுகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 07 . 1961



மறைவு 07 . 12 . 2025

### இராசேந்திரம் சோதிமலர் (சோதி)

(இணுவில்)

இணுவில் மேற்கு இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொக்கன்வளவு இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் சோதிமலர் அவர்கள் கடந்த (07.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - ருக்குமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராசேந்திரம் அவர்களின் அன்பு மனைவியும், றமணன் (கனடா), சாரங்கன் (இணுவில்), ரவிசங்கர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிசா, சுஜந்தா, உதயதர்சினி (சுதா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கனகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, வரதலிங்கம், யோகேஸ்வரி, பாஸ்கரன், திவாகரன், பரமேஸ்வரன், கங்காதரன், தேவமனோகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், விஜயரட்ணம் மற்றும் மனோரஞ்சிதம், யோகேஸ்வரி, பவளமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், புவனேஸ்வரி, செல்வராணி, காலஞ்சென்றவர்களான நடராசா, திருநாவுக்கரசு, மகாலிங்கம் ஆகியோரின் உடன்பிறவாத சகோதரியும், காலஞ்சென்றவர்களான பசுபதிபிள்ளை, விருத்தாசலம், செல்வரத்தினம் மற்றும் சிவலோகநாயகி, கலாநிதி, சரோஜாதேவி, இராஜலக்ஷ்மி, தர்சினி (கேமா), கணேசலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், அகல்யா, திஷாயினி, ஆதிரையன், அதுல்யா, சக்திசரண், ரித்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 538 9402
பிரதாபன் - 077 219 2319
கோபி - 077 428 6052

கொக்கன்வளவு,
இணுவில் கிழக்கு.

CS/60130) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 12 . 1945



மறைவு 09 . 12 . 2025

### பொன்னையா மல்லிகானந்தபரமகுலசிங்கம்

அராலி கிழக்கு, ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மல்லிகானந்தபரமகுலசிங்கம் அவர்கள் நேற்று (09.12.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சித்திரமணியின் அன்புக் கணவரும், ஆனந்தராசா, மணிவண்ணன், சந்திரகுமார், சிவாசினி, சந்திரமோகன், காலஞ்சென்ற மதுசுதன் மற்றும் மதியரசன், மயூரன், விசயமாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.12.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி மீனாங்குப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அராலி கிழக்கு,
ஐயனார் கோவிலடி.

(CS/60127) J-1

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 11 . 1962



மறைவு 08 . 12 . 2025

### தர்மலிங்கம் ஸ்ரீதரன்

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் ஸ்ரீதரன் அவர்கள் கடந்த (08.12.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், ஆர்த்திகா (ஜேர்மனி), மயூரிகா (சனச அபிவிருத்தி வங்கி - கிளிநொச்சி), தர்மிகன், தர்சனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காந்தீபன் (ஜேர்மனி), செந்தூரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அகணவி (ஜேர்மனி) இன் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சறோஜா மற்றும் பாஸ்கரன் (ஓய்வுநிலை சிரேஷ்ட சாலைப் பரிசோதகர் - CTB), கமலாகரன் (சுவிஸ்), தயாகரன் (பொறியியலாளர் - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் சுமதி (ஓய்வுநிலை ஆசிரியர்), கௌசல்யா (சுவிஸ்), கம்சானந்தி (கனடா), உதயகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற கருணகுமார் மற்றும் திலகேஸ்வரி, சசிகுமார் (பிரான்ஸ்), தனீஸ்வரி, குகதீஸ்வரி (பிரான்ஸ்), மதனகுமார், ரமணகுமார், பிரேமகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் சின்னத்தூ இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 572 8346 - சகோதரன்
077 413 2881 - மகன்
077 076 2342 - மகன்

(CR/60131) J-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவித்தல் - 2026
# வலிகாமம் மேற்கு பிரதேச சபை , சுழிபுரம்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்கள் வியாபார வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்களின் நிர்வாகிகளுக்குமான வேண்டுகோள்.

| தொடர் இல | விடயம் | அறிவித்தல் |
|---|---|---|
| 1 | ஆதன வரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 முதல் 146 பிரிவுகளின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி மீள்மதிப்பீடு செய்யப்பட்ட அசைவற்ற ஆதனங்கள் தொடர்பான விபரங்கள் 02.12.2016ம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட்டு மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதன் பிரகாரம் 2026ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிறுப்பாளர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்<br>1.ஜனவரி 31ம் திகதிக்கு முன்னர் வரி செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும்.<br>2.ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.<br>3.குறித்த காலாண்டிற்குள் அக்காலப்பகுதிக்கான கட்டணம் செலுத்தத்தவறின் தண்டப்பணம் அறவிடப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 2 | ஆதனப் பெயர் மாற்றம் செய்தல் | எமது சபையின் எல்லைக்குள் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடமையினைக் கொண்டு எமது ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 3 | பட வரைஞர்களைப் பதிவு செய்தல் | 2026ம் ஆண்டிற்கு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2025ம் ஆண்டு டிசம்பர் 16 ம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும். புதுப்பித்துக் கொள்ளவும் தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 4 | கட்டிட அனுமதியும் குடிபுகு சான்றிதழும் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டிடங்கள் , மதில்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டிடத்தினை திருத்துவதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டிடங்கள் மதில்கள் அமைக்கப்பட வேண்டும்.<br>2. புதிய கட்டிடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாதுவிடின் கட்டிட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டிடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டிடங்களுக்கு தண்டப்பணம் அறவீடு செய்யப்படும் அத்துடன் வீதி எல்லைக்கோட்டை பாதிக்கும் மற்றும் சுகாதாரத்திற்கு ஒவ்வாத முறையில் அமைக்கப்படும் கட்டடங்கள் அகற்றப்படும். |
| 5 | வியாபார அனுமதிப் பத்திரம் - 2026 | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் இதுவரை வியாபார விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்காவிடில் உரிய விண்ணப்பப்படிவத்தை சங்கானை, சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் 2026ம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2026ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2026ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 6 | துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம் | துவிச்சக்கர வண்டிகள் , வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31.03.2026ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2026ம் ஆண்டுக்கான வாகன மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 7 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கட்டாக்காலிகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காது விட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | பொது சுகாதாரத்தினைப் பேணுதல் | அபிவிருத்தி செய்யப்படாத பற்றைகள் உள்ள காணிகள் துப்பரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப்பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | திண்மக் கழிவுகளை அகற்றுதல் | திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு அவற்றை தமது இடங்களிலேயே சூழலுக்கு பாதிப்பற்ற வகையில் புதைத்து சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்ற முடியாதுள்ள உக்காத கழிவுப் பொருட்களை மாத்திரம் தரம் பிரித்து பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலும் நுளம்பு பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| 10 | வீதி ஒழுங்கைப் பேணல் | வீதி ஒழுங்கை பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருள்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள் ,மரக்கறிகள் , இறைச்சிகள் என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது. |
| 11 | நீர் வழங்கல் சேவை | பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கட்டணம் செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும். |
| 12 | கனரக வாகன, Rammer சேவை | என்ஜின் றோலர் (Engine Roller), Rammer மற்றும் பைக்கோ (JCB) வாடகைக்கு தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 13 | சூழல் பாதுகாப்பு உரிமம் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டியோர் வலிகாமம் மேற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும் எற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும். |
| 14 | விளம்பரங்களை அமைத்தல் காட்சிப்படுத்தல் | வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2026ம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். இவ்வாறு அனுமதி பெறப்படாத சகல விளம்பரங்களும் உரிய நிலையங்களில் இருந்து 01.02.2026ம் திகதிக்குப் பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 15 | தரகர் முறை நீக்கம் | எமது பிரதேச சபை எல்லைக்குள் சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர்கள் வேண்டப்படுகின்றனர். |
| 16 | கழிவுறிஞ்சி வாகன சேவை | மலக்கழிவு தவிர்ந்த ஏனைய கழிவுநீர் அகற்றுவதற்கான சேவை தேவைப்படுவோர் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். |
| 17 | இயற்கை நீரோட்டத்தை தடுத்தல் | மழைக்காலங்களில் இயற்கை நீரோட்டத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கட்டுமானப்பொருட்கள்,கட்டட இடிபாடுகள் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் குடியிருப்பாளர்களினால் தேக்கி வைத்திருப்பின் அவை சபை உடைமையாக்கப்படுவதோடு நீதிமன்றத்தினூடாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். |

**ச.ஜயந்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**

# இடர் முகாமைத்துவப் பொறிமுறை மாற்றப்பட வேண்டியது அவசியம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ.10**

பேரிடரில் இருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ளவேண்டும். இடர் முகாமைத்துவ பொறிமுறையை நாம் மாற்றியமைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

வெள்ளம் மற்றும் மண்சரிவால் பாதிக்கப்பட்ட நிலையில் இடைத்தங்கள் முகாம்களில் தங்கியுள்ள மக்களைச் சந்தித்த போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

காலநிலை மாற்றங்களால் பல்வேறு இடையூறுகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக ஏற்படும் அனர்த்தங்கள் மற்றும் அபாயங்கள் தொடர்பாகத் தெரிவிக்கும் முறையான முன்னெடுப்பு நடவடிக்கை உரியவாறு இயங்கவில்லை என்பது தெரியவருகிறது. அபாயத்தை முன்கூட்டியே மக்களுக்கு அறிவித்திருந்தால், இழப்புகளை ஓரளவுக்குக் குறைத்திருக்கலாம்.

வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்தபோது, இடர் முகாமைத்துவ நிலையப் பொறிமுறை ஏன் உரியவாறு செயற்படாது போனது என்பதை நினைத்துப் பார்க்க முடியாதுள்ளது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள், செய்திச் சேவைகள் மற்றும் வானிலை முன்னறிவிப்பு நிறுவனங்கள் 15 நாள்களாக எச்சரிக்கை விடுத்தபோதிலும், இது போன்ற ஆபத்து இருந்தபோதிலும் இடர்முகாமைத்துவப் பொறிமுறை ஏன் முறையாக இயங்கவில்லை என்ற விடயத்தில் பிரச்சினை காணப்படுகின்றன. சுனாமியிலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ளாவிட்டாலும், இந்தப் பேரழிவிலிருந்தேனும் நாம் பாடம் கற்றுக்கொண்டு, நமது நாட்டில் ஏற்படும் பல்வேறு வானிலை மற்றும் காலநிலை தாக்கங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இடர்முகாமைத்துவப்பொறிமுறையை நாம் மாற்றி யமைக்க வேண்டும்-என்றார். (எ-44)

# அணையாவிளக்கு தூபி சேதம்: அமைச்சர் கண்டனம்




**கொழும்பு, டிசெ.10**

செம்மணி வளைவுப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அணையா விளக்கு நினைவுத்தூபி சேதப்படுத்தப்பட்டமைக்கு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும், வரலாற்று நினைவுகளை யும் பிரதிபலிக்கும் முக்கியமான அடையாளமான இந்தத்தூபியை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பவம் சமூக ஒற்றுமைக்கும், ஜனநாயக மதிப்புகளுக்கும் எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் செயலில் ஈடுபட்டவர்களை விரைவாக அடையாளம் காண்பது அவசியம், அதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



மரநடுகை மாதத்தையொட்டி சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் தனங்கிளப்புப் பகுதியிலுள்ள சங்கத்தின் காணியில் பனம்விதைகள் அண்மையில் நடுகை செய்யப்பட்டன. (ச-41-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

ஒரு யோசனையின்
மதிப்பு அதை
பயன்படுத்துவதிலேயே
இருக்கின்றது.

- தோமஸ்
அல்வா எடிசன்

# நோமோபோமியா

## டிஜிற்றல் உலகில் புதிய நோய்!

• சண்சியா வரதராசன்

அன்றாட வாழ்வில் அத்தியாவசியப் பொருளாக மாறிவிட்ட ஒரு கருவி எதுவென்று கேட்டால் பெரும்பாலோனோரின் பதில் திறன்பேசிகள்தான். தகவல் பரிமாற்றம், வேலை, கல்வி, பொழுதுபோக்கு என மனிதவாழ்வின் எல்லா அங்கங்களிலும் ஊடுருவிவிட்ட இந்தக் கருவி, ஒரு புதிய உளவியல் சிக்கலை உருவாக்கியுள்ளது. அதுதான் நோமோபோபியா (Nomophobia) ஆகும். அதாவது 'நோ மொபைல் போன் போமியா' என்பதே இதன் விரிவாக்கமாகும். தமிழில், 'திறன் பேசிகள் இல்லாததால் ஏற்படும் பயம்' என்று இதை அழைக்கலாம். இது டிஜிற்றல் உலகில் வேகமாகப் பரவிவரும் ஒரு புதிய மனநலப் பிரச்சினையாகும்.

### நோமோபோபியா என்றால் என்ன?

நோமோபோபியா என்பது ஒரு நபர் திறன்பேசிகள் அல்லது வேறு எந்த டிஜிற்றல் தொடர்புசாதனத்தையும் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்படும்போது, அல்லது அது கிடைக்காமல் போகும்போது, அனுபவிக்கும் தீவிரமான பதற்றம், பயம் மற்றும் மனச்சோர்வு ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு மனநிலைப் பிரச்சினையாகும். 2008ஆம் ஆண்டில், பிரிட்டனின் அஞ்சல் துறை நடத்திய ஆய்வின் மூலம் இந்தக் கருத்து முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. திறன்பேசிகள் பயநர்கள் மத்தியில் இல்லாமல் இருக்கும்போது ஏற்படும் பதற்றத்தை ஆராய்வதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வின் முடிவுகள் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தன. பதிலளித்தவர்களில் 53 வீதமானவர்கள் திறன்பேசிகள் தொலைந்து போகும்போதும், திறன்பேசிகளின் மின்கலனில் சக்தி குறைந்து போகும்போதும், சிக்னல் கிடைக்காதபோதும் பயத்தையும் மன உளைச்சலையும் உணர்வதாகத் தெரிவித்தனர். இன்று, இந்த நிலைமை மேலும் மோசமடைந்து பல நாடுகளிலும் இது ஒரு முக்கியமான சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

### நோமோபோபியாவின் அறிகுறிகள்

• ஒரு நபருக்கு நோமோபோபியா இருக்கிறதா என்பதைக் கண்டறிய சில பொதுவான அறிகுறிகள் உள்ளன. இந்த அறிகுறிகள் உடல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் வெளிப்படுகின்றன.

• திறன்பேசி தொலைந்துவிடுமோ, திருடப்பட்டு விடுமோ என்ற தொடர்ச்சியான பயம்.

• எந்த அறிவிப்புகளும் இல்லாவிட்டாலும், திறன்பேசியைத் தொடர்ந்து எடுத்துப் பார்ப்பது அல்லது 'சிக்னல் இருக்கிறதா' என்று சோதித்தல்.

• திறன்பேசி தொலைந்து போனால், பேட்டரி தீர்ந்துவிட்டால் அல்லது சிக்னல் கிடைக்கவில்லை என்றால், உடனடியாகத் துடிதுடிப்பது, பதற்றமடைவது, சுவாசம் மாறுபடுவது, வியர்ப்பது, இதயத்துடிப்பு அதிகரிப்பது போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்.

• விமானப் பயணங்கள், கூட்டம், சினிமா போன்ற இடங்களில்கூட மொபைலை 'சைலன்ட் மோடில்' வைக்கமுடியாமல் இருப்பது.

• பேட்டரி கிட்டத்தட்ட முழுமையாக இருந்தாலும், மீண்டும் மீண்டும் சார்ஜ் செய்வது.

• மொபைலை அருகிலேயே வைத்துக்கொண்டு தூங்குவது அல்லது நடு இரவில் விழித்து மொபைலைச் சோதிப்பது.

• நேரடிச் சமூகத் தொடர்புகளைத் தவிர்த்துவிட்டு, டிஜிற்றல் தொடர்புகளிலேயே அதிக நேரத்தைச் செலவிடுவது.

• மொபைல் பயன்படுத்தமுடியாத சூழ்நிலைகளை முற்றிலும் தவிர்ப்பது.

இவ்வாறாக மேற்குறிப்பிடப்பட்ட அறிகுறிகள் படிப்படியாக ஒருவரின் அன்றாட வாழ்க்கை, வேலை, கல்வி மற்றும் சமூக உறவுகளைப் பாதிக்கத் தொடங்கினால், அதை நோமோபோபியாவாகக் கருதலாம்.



### நோமோபோபியா ஏற்படுவதற்கான காரணங்கள்

• நோமோபோபியா உருவாவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை பெரும்பாலும் நவீன சமூகத்தின் டிஜிற்றல் மயமாக்கல் மற்றும் உளவியல் காரணிகளுடன் பின்னிப் பிணைந்துள்ளன:

• திறன்பேசிகள் ஒருவரை உலகம் முழுவதும் உள்ள உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வேலைத் தொடர்புகளுடன் இணைக்கின்றன.

• இந்தத் தொடர்புகள் துண்டிக்கப்படும்போது, தனிமைப்படுத்தப்பட்டு விட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

• சமூக ஊடகங்கள் மற்றும் நிகழ்வுகள் பற்றிய முக்கியமான தகவல்களைத் தவறவிட்டுவிடுவோமோ என்ற பயம்தான் பலரையும் மொபைலைத் தொடர்ந்து சரிபார்க்கத் தூண்டுகிறது.

• பலருக்கு திறன்பேசி என்பது ஒரு அடையாள அட்டையைப் போன்றது. வங்கி விபரங்கள், தனிப்பட்ட புகைப்படங்கள், முக்கியமான ஆவணங்கள் என அனைத்தும் அதனுள் இருக்கின்றன. அதைப் பயன்படுத்தமுடியாமல் போனால், ஒருவரின் முழு அடையாளமும் கட்டுப்பாடும் இழந்துவிட்டது போல் உணர்வார்கள்.

• ஏற்கனவே பதற்றம், மனச்சோர்வு, சமூகப்பயம் போன்ற மனநலப் பிரச்சினைகளைக் கொண்டவர்களுக்கு நோமோபோபியா வருவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஏனெனில் திறன்பேசிகள் அவர்களுக்குத் தற்காலிகமாகப் பாதுகாப்பு மற்றும் ஆறுதல் உணர்வைத் தருவதாக உணர்வார்கள்.

• குறிப்பிட்ட ஒரு செயலைத் தொடர்ந்து செய்யும்போது அது மூளையில் ஒரு பழக்கமாக உருவாகிறது. எனவேதான் திறன்பேசியில் இருந்து வரும் ஒவ்வொரு அறிவிப்பும் ஒருவித மகிழ்ச்சியூட்டும் டோபமைன் ஹார்மோனை வெளியிட்டு, தொடர்ந்து மொபைலைப் பயன்படுத்தத் தூண்டுகிறது.

### நோமோபோமியாவின் பாதக விளைவுகள்

• நோமோபோபியா என்பது வெறும் ஒரு நோய் மட்டுமல்ல, இது ஒருவரின் உடல் மற்றும் மன ஆரோக்கியம், சமூக வாழ்க்கை மற்றும் தொழில்முறையைப் பாதிக்கக் கூடிய தீவிரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது. தொடர்ச்சியான பதற்றம், மனச்சோர்வு, தூக்கமின்மை, கவனச்சிதறல் மற்றும் மனஅழுத்தத்தின் அளவு அதிகரித்தல். • கண்கள் மங்குதல், கழுத்து மற்றும் முதுகுவலி, கைகள் மற்றும் மணிக்கட்டுகளில் வலி, அத்துடன் போதிய உடற்செயற்பாடு இல்லாததால் உடற்பருமன் அதிகரித்தல்.

• குடும்பம் மற்றும் நண்பர்களுடன் நேரடித் தொடர்புகளைத் தவிர்ப்பது, உரையாடலின் போது திறன்பேசிகளைப் பார்ப்பது. இது உறவுகளில் பிரிவினைகளை ஏற்படுத்துகிறது.

• கவனச்சிதறலால் படிப்பு அல்லது வேலையில் கவனம் செலுத்தமுடியாமல் போவது, செயற்றிறன் குறைதல். வாகனம் ஓட்டும்போதும் அல்லது சாலைகளில் நடக்கும்போதும் மொபைலைப் பயன்படுத்துவதால் விபத்துகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

### நோமோபோபியாவுக்கு தீர்வு என்ன?

• இந்த டிஜிற்றல் சவாலை எதிர்கொள்ளவும், நோமோபோபியாவில் இருந்து மீண்டு வரவும் சில பயனுள்ள உத்திகள் உள்ளன:

• சில குறிப்பிட்ட நேரங்களுக்கு மொபைலைத் தொலைவில் வைக்கப் பழகுதல்.

• அத்தியாவசியமற்ற அனைத்துப் பயன்பாட்டுச் செயலிகளினதும் அறிவிப்புகளையும் முடக்குவது, இதனால் திறன்பேசியை அடிக்கடி பார்க்கவேண்டிய தூண்டுதலைக் குறைக்கமுடியும்.

• புத்தகம் படிப்பது, உடற்பயிற்சி செய்வது, பொழுதுபோக்குக்காக ஒரு புதிய கலையைக் கற்பது அல்லது நேரடிச் சமூக நடவடிக்கைகளில் பங்கேற்றல்.

• தீவிரமான நோமோபோபியா கொண்டவர்கள், உளவியல் ஆலோசகர்கள் அல்லது மனநல மருத்துவர்களின் உதவியை நாடலாம். அறிவாற்றல் நடத்தைச் சிகிச்சை போன்ற சிகிச்சைகள் இந்த நோயைக் கையாள உதவுகின்றன.

எனவே தான் மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தொகுத்து நோக்குகின்ற பொழுது திறன்பேசிகள் நவீன வாழ்வின் இன்றியமையாத கருவிகளாக அமைந்தாலும், அவற்றின் பயன்பாட்டை முழுவதுமாகத் தவிர்ப்பது சாத்தியமில்லை. ஆனால், ஒரு கருவி நமது வாழ்க்கையை ஆள்வதற்கு நாம் அனுமதிக்கும் போதுதான் சிக்கல்கள் எழுகின்றன. நோமோபோபியா என்பது ஒரு புதிய சகாப்தத்தின் மனநலப் பிரச்சினை. இதை உணர்ந்து, 'டிஜிற்றல் நல்வாழ்வு' என்ற ஒரு சமநிலையான அணுகுமுறையை மேற்கொள்வது அவசியம். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துபவர்களாக நாம் இருக்கவேண்டுமே தவிர, அதன் அடிமைகளாக இருக்கக்கூடாது. நமது மனதையும், உடலையும், சமூக உறவுகளையும் பாதுகாக்கும் பொறுப்பு நம்மிடம் உள்ளது. இந்த விழிப்புணர்வுதான், நோமோபோபியா என்ற நவீன நோயிலிருந்து நம்மைப் பாதுகாக்கும் முதன்மையான பாதுகாப்பு உத்திமுறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையின் நாக்கு வெளியில் நீட்டமுடியாமல் ஒட்டியிருத்தல்



## பெற்றோர் அறிந்திருக்கவேண்டிய முக்கியமான தகவல்கள்

மருத்துவர் பா.சயந்தன்

குழந்தையின் நாக்கு ஒட்டியிருத்தல் என்பது பெற்றோருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இது அவர்களுக்குக் கவலை, பதட்டம் மற்றும் உணவளிப்பதில் சிரமம் போன்றவற்றை ஏற்படுத்தும். இதுதொடர்பாகப் பெற்றோர் அறிந்திருக்கவேண்டிய முக்கியமான விடயங்களாவன:

**நாக்கு ஒட்டியிருத்தல் என்றால் என்ன?**

நாக்கு ஒட்டியிருத்தல் (மருத்துவ ரீதியாக அன்கைலோகுளோசியா என்று அழைக்கப்படுகிறது) என்பது குழந்தையின் நாக்கின் கீழுள்ள மெல்லிய இழையங்கள் வழக்கத்தைவிடக் குறுகியதாகவோ, தடிப்பாகவோ அல்லது இறுக்கமாகவோ காணப்படும். இதனால் நாக்கின் இயக்கம் குறைவடைகின்றது.

இது சில குழந்தைகளில்:

- பாலூட்டும் செயல்முறையைப் பாதிக்கலாம்,
- விழுங்குவதில் சிரமத்தை ஏற்படுத்தலாம்,
- பிற்காலப்பகுதியில் பேச்சுத்திறனில் சிக்கல் போன்றவற்றை ஏற்படுத்தலாம்.

**எப்படித் தெரிந்து கொள்வது?**

அனைத்து நாக்கு ஒட்டியிருக்கும் நிலைமைகளும் ஆபத்தானதாக அமையாது. ஆனால் கீழ்க்கண்ட அறிகுறிகள் காணப்படின், கவனிக்கவேண்டியது அவசியம்:

- குழந்தை தாய்ப்பால் குடிக்கும்போது மார்புக்காம்புகளை முழுமையாக உள்வாங்குவதில் சிரமம்.
- அடிக்கடி தாய்ப்பால் குடித்தாலும் சரியான எடை உயர்வு இல்லாமல் இருத்தல்.
- பால் குடிக்கும் போது 'கிளிக்' ஒலி ஏற்படுதல்.
- தாயின் மார்புக்காம்புகளில் வலி ஏற்படுதல்.
- தாய்ப்பால் சிந்துதல் அல்லது நீண்டநேரம் தாய்ப்பால் குடித்தல்.

சில குழந்தைகளில் அறிகுறிகள் தென்படாமல் இருந்தால் குடும்பநல ஆலோசகர்கள் அல்லது குழந்தை மருத்துவர் பரிசோதனை மூலமாக இதனைக் கண்டறிவார்.

**தாய்ப்பால் ஊட்டலைப் பாதிக்குமா?**

ஆம், சில குழந்தைகளில் நாக்கு நகராமல் ஒட்டியிருத்தல் காரணமாக தாய்ப்பால் குடிப்பதில் சிரமம் ஏற்படலாம்.

இதனால் பால் உறிஞ்சும் திறன் குறைந்து ஊட்டச்சிக்கலும், தாய்க்கு வலியும், தாய்ப்பால் உற்பத்தியாகும் செயல்முறையும் பாதிக்கப்படும்.

**பேச்சுத் திறனில் பாதிப்பு ஏற்படுமா?**

பெரும்பாலும் லேசான நாக்கு ஒட்டியிருத்தல் நிலையானது. பேசுவதில் சிரமத்தை ஏற்படுத்தாது. எனினும் அதிகமாகப் பாரதூரமான நிலைகளில் குழந்தைகள், 'ட', 'ல', 'ர', 'ந' போன்ற ஒலிகளைச் சரியாக உச்சரிப்பதில் சிரமத்தை ஏற்படுத்தும்.

**சிகிச்சை அவசியமா?**

அனைத்து நாக்கு ஒட்டியிருக்கும் நிலைமைகளுக்கும் சிகிச்சை தேவைப்படுவதில்லை. குழந்தை நன்றாகத் தாய்ப்பால் குடித்து வளர்ச்சி பெறுகிறதெனில், மருத்துவர்கள் குழந்தைகளைக் கண்காணிப்பதற்கே பரிந்துரை செய்வார்கள்.

ஆனால் தாய்ப்பால் குடிப்பதில் சிரமம் ஏற்பட்டால் அல்லது நாக்கு ஒட்டியிருத்தல் மிகவும் இறுக்கமாக இருந்தால், ஒரு சிறிய சத்திரசிகிச்சை தேவைப்படுகின்றது. இதில் குழந்தையின் நாக்கின் கீழுள்ள மென்மையான இழையத்தைச் சிறிது வெட்டுவார்கள். இது மயக்கமருந்து இல்லாமல் செய்யப்படலாம். வலி மிகக் குறைவாகவே காணப்படும்.

குழந்தைகளில் உடனடி மாற்றத்தினை நாம் அவதானிக்கமுடியும். குழந்தை சிறந்த முறையில் தாய்ப்பால் குடிக்க ஆரம்பிக்கும்.

**பெற்றோர் என்ன செய்யவேண்டும்?**

- தாய்ப்பால் ஊட்டம் எப்படி நடைபெறுகிறது என்பதைக் கவனிக்கவும்.
- தாய்ப்பால் ஊட்டத்தில் சிரமம் இருந்தால் மருத்துவரை அல்லது குடும்பநல உத்தியோகத்தரை அணுகவும்.
- ஆரம்பத்திலே கண்டறிவது முக்கியமாகும். தாமதமின்றி மருத்துவ ஆலோசனையை நாடவேண்டும். சிறுவர் சத்திரசிகிச்சை நிபுணரின் உதவியை நாடலாம்.
- சிகிச்சைக்குப் பிறகு ஊட்டம் மற்றும் வளர்ச்சியைப் பரிந்துரைக்கப்பட்டபடி கவனிக்கவும்

நாக்கு ஒட்டியிருத்தல் என்பது ஆபத்தான நிலையல்ல. ஆனால் தாய்ப்பால் ஊட்டம் அல்லது குழந்தையின் உடல்நிலை பாதிக்கப்படுவதைக் கவனித்தால், அதை அலட்சியமாக விட்டுவிடக்கூடாது. ஆரம்பத்திலே கண்டறிவதும், தாமதமின்றி மருத்துவ ஆலோசனை பெறுவதும் உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும். நாக்கு ஒட்டியிருத்தல் எனச் சந்தேகம் இருந்தால் மருத்துவரிடம் தயக்கமின்றி ஆலோசனை பெறுங்கள். இந்தச் சிறிய நடவடிக்கை பெரிய நன்மையை ஏற்படுத்தும்.

# ஊற்றும் ஊற்றங்கரையும்!

முல்லைத்தீவின் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில், முள்ளியவளைக் கிராமத்தின் ஆறாம் வட்டாரத்தில், தண்ணீரூற்று பொதுச் சந்தைக்கு எதிர்ப்பக்கமாக சுமார் 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது ஊற்றங்கரை. அந்தப்பகுதிக்கு இந்தப் பெயர் வருவதற்குக் காரணம் அங்கிக்கும் ஓர் ஊற்றுத் தான். ஒரு கிணற்றில், அதன் கட்டுக்கு மேலாக எந்நேரமும் தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கும் அதிசயம்தான் இது.

எந்நேரமும் ஓடிக்கொண்டிருக்கும் நீரால், பயிர்நிலங்கள், வயல் வெளிகள் பச்சைப் பசேலெனக் காட்சி தருகின்றன. காற்றில் அசைந்தாடும் பயிர்களின் அழகு அத்தனை நேர்த்தியானது. தண்ணீரின் சலசலப்பு, வண்டுகளின் பறவைகளின் ரீங்காரம், மந்த மாருதத்தின் குளிர்மை என அனைத்தையும் ஒருசேர அனுபவிக்கக்கூடிய இடமாக ஊற்றங்கரை காணப்படுகின்றது.

1948ஆம் ஆண்டில் அவ்விடத்தில் ஒரு கிடங்கு வெட்டப்பட்டபோது தண்ணீர் பீறிட்டுப் பாய்ந்தது என்றும், பின்னர் ஊர்மக்களின் கோரிக்கைக்கு இணங்க அங்கு கேணி அமைக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அதே பகுதியைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை சிவசிதம்பரம் என்பவரின் தலைமையிலேயே இந்தக்கேணியை அமைக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இவர் அக்காலத்தில் விவசாயத் திணைக்களத்தில் பணியாற்றினார். பின்னர், 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டுவரை நாடாளுமன்ற உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார். அத்துடன், கேணிக்கான நிதி ஒதுக்கீடுகள் வவுனியா மாவட்டச் செயலரால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தக் கேணியானது ஆண்களுக்கு, பெண்களுக்கு என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளமையும் விசேட அம்சமாகும். அத்துடன் இந்தக் கேணியின் கொள்ளளவை அதிகரித்துக் குறைக்க முடியும். தடுப்புப் பலகைகளின் உதவியுடன் இந்த நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இப்பேர்ப்பட்ட கேணி அமைப்பை இலங்கையில் வேறெங்கும் காண்பது அரிதிலும் அரிதே.

வே.ம.இந்திரநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் திணைக்களத்தால் 56 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல்

கொழும்பு, டிசெ.10

மட்டக்களப்பு, வெல்லாவெளியில் தொல்பொருள் திணைக்களத்தால் வழிகாட்டல் பதாகை நடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைத் தடுத்துக் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் 56 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அழைப்பாணை வெல்லாவெளி பொலிஸ் ஊடாக 35ஆம் கிராமத்தில் உள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் கத்திக்குத்துச் சம்பவம் ஒன்றில் உயிரிழந்தவருக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது என்றும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். வெல்லாவெளி பொலிஸார் ஊடாக தொல்பொருள் திணைக்களத்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும்11ஆம் திகதி களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

கடந்த மாதம் 22ஆம் திகதி 35ஆம் கிராமம் கண்ணன்புரம் பகுதியில் தொல்பொருள் திணைக்களம் பதாகை நட முயன்ற போது பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தனர். பொதுமக்களின் கடும் எதிர்ப்புக் காரணமாக அந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்தது. (எ-இ)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலய நான்காம் கார்த்திகைச் சோமவார உற்சவம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

# டித்வா பேரிடர்; 638 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 11

டித்வா புயலால் ஏற்பட்ட பேரிடர்களில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 638ஆக அதிகரித்துள்ளது.


டித்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட அறிக்கையை இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே புயலால் 638 பேர் உயிரிழந்துள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 191 பேரைக் காணவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (ம)

# அக்கராயன்குளத்தை பாதுகாக்க மண்மூடைகள்

கிளிநொச்சி, டிசெ.10

கிளிநொச்சி திணைக்களத்துக்குட்ட அக்கராயன் குளத்தின் அணைக்கட்டில் உடைவு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து விவசாயிகள் சேர்ந்து மண்மூடை கொண்டு அணைக்கட்டை பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-113)


# பொது அறிவித்தல் - 2026
# வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள் அதிகாரங்களின்படி 2026ம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கா மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவ வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2026 ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2026 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியி 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குரிய வரியை குறித் கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படு என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்கு ஆதனவரியை செலுத்த தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக் 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து மேலதிக கட்டணம் அறவிடப்படு எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2026 ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாக செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப்பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர்மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேசசபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்ற செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் / பிறசட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள் | 1. எமது நிர்வாகத்திற்குற்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத்தூண்கள், தொலை தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்ல புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்த வேலை செய்வதாயின் பிரதேசசபையில் உரி ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறி 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைவா நடவடிக்கை எடுக்கப்படும்.<br>2. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழை நீர் சேகரிப்பு கட்டுமானங்கள் கட்டாய அமைக்கப்படுதல் வேண்டும்<br>3. புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஓ வருட காலத்தினுள் வேலை பூர்த்தியாகாதவிடத்து அவ் விண்ணப்பதாரிகள் உரிய கட்டணம் செலுத் கட்டட அனுமதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.<br>4. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபையின் அந்தந்த உப ஆலுவலகங்களுக்கு கட்டிடம் பூர்த் செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>5. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்த அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.<br>6. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீரசெய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/ ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசே வர்த்தமானப்பத்திரிகை பகுதி I தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்க பிரகாரம் அறவீடு செய்யப்படும |
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட / பிரிக்கப்படவேண்டிய ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்படவேண்டிய சந்தர்ப்பத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித் அனுமதி பெற்றபின் ஆதனம் பிரிவிடல் செய்யப்பட வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2022ஆம் அண்டு தை மாத 27ஆம் திகதி 2264/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "ஈ"பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொட கொண்டு விண்ணப்பபடிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகா உரிமத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| 06 | வியாபார அனுமதிப்பத்திரம் 2024 | பிரதேசசபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருள்கை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களி 2026ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களி சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 2026.03.31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபா அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 2026.03.31 ஆம் திகதிக்கு முன்னர் வியாபா அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கரவண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2026.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களி உரியகட்டணங்களை செலுத்தி 2026ம் ஆண்டுக்கான துவிச்சக்கர வண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள் வேண்டும். |
| 08 | மிருகங்களுக்கன உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2026.03.31ஆம் திகதிக்கு முன் சபையின் உப அலுவலகங்களில் உரி கட்டணங்களை செலுத்தி பதிவு செய்து 2026 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள் வேண்டும். |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேசசபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேசசபையின் அனுமதியை பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினா அகற்றப்படும். கட்டண விபரம் பின்வருமாறு |

| இல | நிரல் I விபரங்கள் | | நிரல் II அறவிடப்படும் கட்டணம் ரூபா ச. |
|---|---|---|---|
| 1. | இலத்திரனியல் விளம்பர பலகைகள் | ஒரு சதுர மீற்றருக்கு | 5,000.00 |
| 2. | இலத்திரனியலற்ற விளம்பர பலகை | ஒரு சதுர மீற்றருக்கு | 3,000.00 |
| 3. | பெயர் பலகைகள் | ஒரு சதுர மீற்றருக்கு | 1,000.00 |
| 4. | நிலைச்சட்டங்கள் | ஒரு சதுர மீற்றருக்கு | 6,000.00 |
| 5 | விசேட நாட்களில் காட்சிப்படுத்தும் விளம்பரங்கள் | நாள் ஒன்றுக்கு | 1,000.00 |
| 6 | நாள் ஒன்றுக்கு விளம்பர சேவை | நடமாடும் விளம்பர சேவை | 5,000.00 |
| 7 | பண்டிகையை முன்னிட்டு வியாபார நிலையங்களின் முன் அமைக்கும் பந்தல் கட்டணம் | நாள் ஒன்றிற்கு | 500.00 |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப்பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். மேலும் சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள்,மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது .சுகாதாரத்திற்கு ஒவ்வாத அனுமதியற்ற நடமாடும் சுண்டல் ,சோளம் மற்றும் தீன்பண்ட விற்பனை தடை செய்யப்படுகின்றது. (விசேட சந்தர்ப்பங்களில் உரிய அனுமதி பெறப்படல் வேண்டும்) |
| 11 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவுகையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது. |
| 12 | பொது இடங்களில் கழிவுபோடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேசசபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடைசெய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்படல் வேண்டும்<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 13 | தரகர் முறை நீக்கல் கழிவு நடை முறைக்கு தடை | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக்குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். அத்துடன் நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவு முறை முற்றாக தடை செய்யப்படுகின்றது என்பது அறியத்தரப்படுகின்றது. |
| 14 | இரசாயன மருந்து விசிறிய பழங்கள் | வியாபாரிகள் | அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்து. |
| 15 | கழிவுநீர் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள | பகிரங்க வடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக்கழிவுநீர், வியாபார கழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்டவிரோதமானது என உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 16 | பொதுப்போக்குவரத்துக்கு இடையூறாகவும் டெங்கு பரவலுக்கு ஏற்ற வகையில் பெரும் கட்டுமான பொருட்களை வைத்தல். | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச தனியார் நிறுவனங்கள | பொது வீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்தல், உரிய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும் டெங்கு நோய்காவி பரவும் ஆபத்தான நிலைமைகளை பேணுதல் தவிர்க்கப்படல் வேண்டும். |
| 17 | நடைபாதை வியாபாரிகள் | விதி ஓரங்களில் தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோா | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி 1998.08.23ஆந் திகதிய 520/7ஆம் இலக்கத்தின் அதிவிசேட வர்த்தமானியின் "பகுதி IV (ஆ)" உள்ளூராட்சி அமைச்சர் அவர்களினால் வெளியிடப்பட்டுள்ள துணைவிதிகளின் கீழ் 28 ஆம் பிரிவின் படி வலிகாமம் தெற்கு பிரதேசசபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் நடைபாதை வியாபாரிகளுக்கு கீழ்க்காட்டப்பட்ட இடங்களில் மட்டும் விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனைய பொது இடங்களில் விற்பனை செய்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.<br>01. இணுவில் பொதுச்சந்தைப்பகுதி<br>02. மருதனார்மடம் பொதுச்சந்தைப்பகுதி<br>03. சுன்னாகம் பொதுச்சந்தைப்பகுதி |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில் புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தியாகராசா பிரகாஷ்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 021 224 0017 / 021 205 3001


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவசாயச் செய்கையாளருக்கு சிறுதானிய விதைகள் வழங்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.10

சிறுதானியச் செய்கைக்குரிய பயறு. கௌபி, உழுந்து மற்றும் மரக்கறிச் செய்கையான கீரை, மிளகாய், பயிற்றை, தக்காளி, வெண்டி ஆகியவற்றுக்கான விதைகளை வழங்க நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வட மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் திருமதி அஞ்சனா தேவி சிறிரங்கன் தெரிவித்துள்ளார்.

“மரக்கறி மற்றும் சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட ஆர்வமுள்ள விவசாயிகள் உடனடியாக, தத்தமது பிரதேச விவசாயப் போதனாசிரியர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு மரக்கறி மற்றும் சிறுதானியச் செய்கையை ஊக்குவிக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் இடர்ப்பாதிப்பால் மரக்கறி மற்றும் சிறுதானியப் பயிர்செய்கை முற்றாக அழிவடைந்துள்ள நிலையில், எதிர்காலத்தில் நுகர்வோருக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் இரு செய்கைகளையும் விரைவாக முன்னெடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. எனவே ஆர்வம் உள்ளவர்கள் விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-17)




# அரசைக் கவிழ்க்க சூழ்ச்சிகள் இல்லை

## எதிர்க்கட்சி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 10



அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எவ்வித சூழ்ச்சிகளிலும் ஈடுபடாது என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். “ தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இந்நாட்டை ஐந்து வருடங்களுக்கு ஆள வேண்டும். தமது பொறுப்பை நிறைவேற்றாமல் அவர்கள் தப்பிச்செல்ல முடியாது. நாம் ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சிசெய்யவில்லை. அதற்கான உத்தரவாதத்தை நாம் வழங்குகின்றோம்.

கடந்த ஒரு வருடமாக நாம் எவ்வித பேரணியையும் நடத்தவில்லை. நாசகாரச் செயலிலும் ஈடபடவில்லை. ஆனால் தேசிய மக்கள் சக்தி எதிரணியில் இருந்திருந்தால் இந்நேரம் என்ன நடந்திருக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே” என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)

# நாயாறுப் பாலம் சேதம் 6 படகுகள் சேவையில்

முல்லைத்தீவு, டிசெ.10

முல்லைத்தீவு நாயாறு பாலம் சேதமடைந்த நிலையில் குறித்த பகுதிப் பொது மக்கள் பாதுகாப்பாகப் பயணம் செய்யும் வகையில் இலங்கைக் கடற்படையின் ஆதரவுடன் ஆறு படகுகள் தற்போது முழு நேரசேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஆறு படகுகளிலும் தலா இரண்டு பயிற்சி பெற்ற உயிர்காக்கும் அதிகாரிகள் பணியில் ஈடுபட்டு உள்ளனர். தகவல் பரிமாற்றத்திற்காக தமிழ் பேசும் கடற்படை அதிகாரி மற்றும் கடற்படை மகளிர் அதிகாரிகளும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவசரமாக தொடர்புகளை மேற்கொள்ள 0723372886 என்ற எண் ணுக்கு அழைத்தால், தமிழ் பேசும் அதிகாரி பதிலளித்து அவசர நிலையில் படகு சேவை ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். நோயாளிகளைக் கொண்டு செல்லுதல், அல்லது பிற அவசியமான இரவு நேர போக்குவரத்துக்காக 0705229463 என்ற தொலைபேசி இலக்கத்தையும் தொடர்பு கொள்ளமுடியும்.

பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பும் நம்பகத் தன்மையும் கருதி அதிகாரபூர்வ கடற்படை போக்குவரத்துச்சேவையை பயன்படுத்தும்படி முல்லைத்தீவு அனர்த்த முகாமைத்துவப்பிரிவு தெரிவித்துள்ளது.

(ம-இ)

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## வழங்குநர்களை பதிவுசெய்தல்- 2026

வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2026 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள். வேலைகள். சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

| தொகுதி A | பொருட்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருட்கள், நிழற்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 04 | திரைச்சீலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள் கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருட்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப் பொருட்கள் |
| A - 11 | எரிபொருட்கள், உராய்வுநீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருட்கள் |
| A - 16 | மருந்துப்பொருட்கள் |
| A-17 | மரக்கன்றுகள் மற்றும் சாடிகள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம் அதனுடன் இணைந்த பொருட்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுக்குளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருட்கள் மற்றும் கட்டட மூலப்பொருட்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத்திருத்தம் |
| B- 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும, திருத்தமும |
| C - 02 | வீதி நிர்மாணமும திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

வழங்கல்கள 2026ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.

- ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்பப்படிவங்கள் சமர்பபிக்கப்பட வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பதிற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக்கட்டணம் ரூ.1000.00 இனை செலுத்தி தலைமை அலுவலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2026” எனக்குறிப்பிட்டு “செயலாளர் வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்” எனும் முகவரிக்கு 31.12.2025ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்பபிக்கப்படல் வேண்டும்.
- மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

தி.பிரகாஷ்
தவிசாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(CR/46674) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்திலிருந்து...

சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். வேலை வாய்ப்புக்காக யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த கறுப்பையா சிவகுமார் (வயது -35) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இ.போ.ச. பேருந்தில் பயணித்த அவர், பேருந்தின் பின்பக்கத்தில் நின்று முகம் கழுவிக் கொண்டிருந்தபோது, பேருந்து செம்மணி வளைவால் திரும்பிய தருணத்தில் வீதியில் தவறி வீழ்ந்துள்ளார். இதையடுத்து காயமடைந்த அவர் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## எம்மைச்...

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்ததாவது:-
வவுனியா வடக்கில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிலரால் இயந்திரங்களின் மூலம் பெரிய மரங்கள் அறுக்கப்பட்டு நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. திரிவைச்சகுளம் பகுதியில் நான் நேரடியாக இதனை அவதானித்தேன். இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத்தடுப்பதற்குத்திணைக்களங்களால் ஏன் முடியவில்லை? இது ஊழல் இல்லையா என ஊழலை ஒழிக்க வந்ததாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கத்திடம் கேட்கின்றேன்.
நிமால்சிறிபாலடிசில்வாவின் சகோதரிக்கு மகாவலித் திட்டத்தின் கீழ் 25 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது. ஆதாரம் இல்லாமல் நான் கூறவில்லை. அதன்படி 30 பேருக்கு 25 ஏக்கர் படி அங்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அப்படியானால்தமிழ் மக்களைக் கடலுக்குள் தள்ளவா போகின்றீர்கள்? இது தமிழ் மக்களால் பயன்படுத்தப்பட்ட பூர்வீக காணிகள். இங்கு ஆக்கிரமிப்புக்கு அனுமதியில்லை. அதற்கு நான் விடமாட்டேன். இப்படியான ஆக்கிரமிப்பு நடவடிக்கையை நிறுத்தாவிடில், ஆயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டிப் போராடுவோம். எங்களைச் சுட்டுக் கொன்றாலும் எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியே தீருவோம் - என்றார். (அ-ம-110)

## பேராசிரியர்...

கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி முன்னிலை பெற்றுள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் புதிய துணைவேந்தரை ஜனாதிபதி இறுதியாகத் தெரிவு செய்யவுள்ள நிலையில், புதிய துணைவேந்தர் பதவிக்குப் போட்டியிடுபவர்களில் மூவரைப் பரிந்துரைப்பதற்கான விசேட பேரவைக் கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
புதிய துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்கள் நேற்றைய விசேட பேரவைக் கூட்டத்தில் தமது எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளித்தனர். அதனைத் தொடர்ந்து பேரவை உறுப்பினர்கள் விண்ணப்பங்களையும், அளிக்கைகளையும் மதிப்பீடு செய்து தனித்தனியாகப் புள்ளி வழங்கினர்.
விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடப் பீடாதிபதி திருநாவுக்கரசு வேல்நம்பி முதலாவது இடத்தையும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாயபீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன் இரண்டாவது இடத்தையும், பல்கலைக்கழக மருத்துவ பீடப் பீடாதிபதி ஆர்.சுரேந்திரகுமாரன் மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளனர். (அ-ம-26-66)

## கிராம...

டன் எகிறிப் பாய்ந்துள்ளார் நல்லூர் பிரதேச செயலர்.
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 16 கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து, தமது பகுதிக்கு 25 ஆயிரம் ரூபா உதவித்தொகை தேவையில்லை என பிரதேச செயலருக்குக் கடிதம் அனுப்பி வைத்திருந்தனர். உதவித் தொகை கோரும் அளவுக்குப் பாதிப்புகள் இல்லை என்பதால், அவர்கள் அவ்வாறு குறிப்பிட்டிருந்தனர். இந்த விடயம் தொடர்பில் உதயனின் நேற்றைய பதிப்பில் செய்தி பிரசுரமாகியிருந்தது. அந்தச் செய்தி தனக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதாகக்கூறியே நல்லூர் பிரதேசசெயலர் உச்சஸ்தாயிக் குரலில் - தொனியில் - கத்தியுள்ளார்.
"கிராம உத்தியோகத்தர்களிடம் இருந்து எந்தக் கடிதமும் எனக்குக் கிடைக்கவில்லை என்றும், இந்தச் செய்தியைப் பிரசுரிக்க வேண்டாம் என்றும் கூறியிருந்தேன். அவ்வாறிருக்கையில் எந்த அடிப்படையில் இந்தச் செய்தியைப் பிரசுரித்தீர்கள்?" என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.
"கிராம உத்தியோகத்தர்களுக்கு இந்த விடயத்தில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இல்லை. அவர்கள் கடிதம் வழங்கினாலும் அதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என எந்த அவசியமும் இல்லை. எனவே இந்தச் செய்தியை வழங்கியது யார்? என்று உடனயடியாக வெளிப்படுத்த வேண்டும்" என்றும் நல்லூர் பிரதேச செயலர் உதயன் ஆசிரிய பீடத்துடன் சீறிப் பாய்ந்தார்.

**ஆசிரியர் குறிப்பு**

1. உதயனின் நேற்றைய பதிப்பில் வெளியான செய்தி நல்லூர் பிரதேச செயலரைக் களங்கப்படுத்தும் வகையிலோ அல்லது இழிவுபடுத்தும் வகையிலோ அமையவில்லை. அத்தகைய சொற்பதங்களும் அதில் பயன்படுத்தப்படவில்லை.
2. வெள்ளப் பேரிடராலும், நிலச்சரிவு உள்ளிட்ட அனர்த்தங்களாலும் பெரும் சேதங்களை எதிர்கொண்ட வீடுகளுக்கே இழப்பீடு வழங்கும் நிலையில், அதே அளவு பாதிப்பு எமக்கும் ஏற்பட்டதாக உண்மைக்குப் புறம்பாகக்கூறி பணத்தைப் பெறுவது இழிவான செயல். எனவே, மனசாட்சியின் அடிப்படையில் பிரதேசசெயலருக்கு கடிதம் அனுப்பிய கிராம உத்தியோகத்தர்களைப் பாராட்டியே அந்தச் செய்தி பிரசுரமானது.
3. தனது பகுதிக்கு உட்பட்ட கிராம உத்தியோகத்தர்களின் செயற்பாடு பாராட்டப்பட்டிருப்பதுடன், அது முன்மாதிரியாகவும் அமைந்துள்ளதை எண்ணி நல்லூர் பிரதேசசெயலர் பெருமைப்பட வேண்டும். ஆனால், உள்ளதை உள்ளபடியாக அறிக்கையிட்ட கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பிலும், அதைப் பிரசுரித்த உதயன் தொடர்பிலும் பிரதேச செயலருக்குக் கோபம் ஏற்பட்டமை இன்னமும் மர்மமே.
4. இந்தச் செய்தி பிரசுரமாக முன்னர், பிரதேச செயலரைத் தொடர்புகொண்டு, 'அவ்வாறான [illegible] கிடைத்ததா?' என்று உதயன் வினவியிருந்தது. அதை பிரதேச செயலர் மறுத்திருந்தார். ஆனால், கிராம உத்தியோகத்தர்களால் பிரதேச செயலருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதி உதயனுக்குக் கிடைத்த பின்னரே அந்தச் செய்தி பிரசுரமானது. அத்துடன், 'கிராம உத்தியோகத்தர்களால் பிரதேச செயலருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது' என்று மட்டுமே செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. மற்றும்படி கடிதத்தை பிரதேசசெயலர் ஏற்றாரா அல்லது மறுத்தாரா என்ற விடயங்கள் அதில் இல்லை.
5. எல்லாவற்றுக்கும் மேல், கிராம உத்தியோகத்தர்கள் இந்த விடயத்தில் முடிவெடுக்க முடியாது என்றால், எதற்காக கிராம அலுவலர்களை அடிப்படைக் கட்டமைப்பாகக் கொண்டு அரசாங்கம் தகவல்களைத் திரட்டுகின்றது? பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பிரதேச செயலர் நேரில் சென்று தகவல்களைத் திரட்டுவாரா? என்றும் கேள்வி எழுகின்றது. தவறான தகவல்களை வழங்கியமைக்காக கிராம உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால், அதனால் வரும் சட்டச் சிக்கல்களை பிரதேச செயலர் எதிர்கொள்வாரா?
6. தனது கிராம உத்தியோகத்தர்களை நினைத்து பெருமைப்பட வேண்டிய பிரதேச செயலர், சம்மந்தமே இல்லாமல் அவர்கள் தொடர்பிலும், உதயன் தொடர்பிலும் காட்டுக்கத்தல் கத்தியமை ஏன்? என்றும், தனக்கு கிராம அலுவலர்களால் அனுப்பப்பட்ட கடிதத்தை மறைக்க முற்பட்டமை ஏன்? என்றும் உதயனுக்கு மட்டுமல்ல வாசகர்களுக்கும் சந்தேகம் ஏற்படவே செய்யும்.
7. எந்தவொரு ஊடகமும் தனது செய்தி மூலங்களை வெளிப்படுத்துவதில்லை. அவ்வாறு வெளிப்படுத்தவும் கூடாது என்பது பொதுவிதி. ஆனால், 'நேர்மைக்கு மகுடம்' விருது பெற்ற ஒரு அதிகாரிக்கு இந்த அடிப்படை விதிகூட தெரியாது இருப்பதும், 'செய்தி தந்தவர் யார்?' என மிரட்டுவதும், அவரது தகுதி குறித்த கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.
(ஆ-ர்)

## டித்வா...

வித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு விஞ்ஞானபூர்வமான தகவல்கள் நவம்பர் 24, 25ஆம் திகதிகளில் கிடைத்திருக்கும் என நம்புகின்றேன். எனவே, தேசிய அனர்த்த நிலையை பிரகடனப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இழப்புகளைக் குறைத்திருக்கலாம். இந்த நிலைமை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் ஜனாதிபதியின் செயலர் ஊடாக ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்பட்டதா? என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறு தெரியப்படுத்தப்பட்டிருந்தால் ஏன் முன்னாயத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்ற விளக்கத்தை அரசாங்கம் வழங்க வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காகவே தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம-44)

## சுமணரத்ன...

நீதவான் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.
2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதியன்று ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியொன்றில், 'வடக்கில் உள்ள தமிழ் மக்களையும் தெற்கில் உள்ள தமிழ் மக்களையும் வெட்டிக் கொல்ல வேண்டும்' என சுமணரத்ன தேரர் தெரிவித்திருந்தார்.
இவரது வன்முறையான கருத்துக்கு எதிராக, 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி சட்டத்தரணி தனுக்க ரணஞ்சக என்பவரால் முறைப்பாடு வழங்கப்பட்டது. இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதுடன், இந்த வழக்குடன் தொடர்புடைய கோப்புகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டன. இதையடுத்து, குறித்த தேரரை கைதுசெய்யுமாறு கடந்த மாதம் சட்டமா அதிபர் திணைக்களம் பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியிருந்தது. எனினும் தற்போதுவரை சுமணரத்ன தேரர் கைது செய்யப்படவில்லை.
இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, சந்தேகநபரான தேரர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. இதையடுத்தே, அவரை எதிர்வரும் 15ஆம் திகதிக்குமுன்னர் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன், அவரை இதுவரை ஏன் நீதிமன்றில் முற்படுத்தவில்லை? என்பது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம-50)

## மன்னார்...

யால் பேராறு குளத்தின் பாதுகாப்புக் கருதி வான் கதவுகள் நேற்றுத் திறக்கப்பட்டுள்ளன.
இதனால் மன்னார் மாந்தை மேற்குப் பிரதேசத்தினூடாகச் செல்லும் பறங்கியாறு, சிப்பியாறு மற்றும் பாலியாறு ஆகியவற்றின் நீர்மட்டம் குறிப்பிட்ட அளவு உயர்வதற்கான வாய்ப்பு உள்ளது. இதையடுத்தே, ஆற்றின் தாழ்நில பிரதேசங்களான சீது விநாயகர், கூராய், தேவன்பிட்டி, ஆத்திமோட்டை, அந்தோனியார்புரம், பாலி ஆறு ஆகிய பகுதிகளில் வாழும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ-ம-56)

## வங்காள...

வரும் சில நாள்களிலேயே இதை உறுதிப்படுத்த முடியும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (அ-ம)

## சட்டவிரோத...

தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்போது வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள நீலியாமோட்டைக்குளம், வேப்பங்குளம் போன்றவற்றை விவசாயத்தேவை கருதி விடுவிக்குமாறு மீளவும் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், அதை விடுவிக்க முடியாது என வனவளத் திணைக்களம் குறிப்பிட்டது.
இதையடுத்தே, எவ்வித அனுமதியும் இல்லாமல் வவுனியா வடக்கில் பெருமளவு காடுகள் அழிக்கப்படுவதற்கு வனவளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது என்றும், அங்கு சிலர் விவசாய நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.
அத்துடன், கிபிள் ஓயாத்திட்டம் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் இதுவரை எவரும் கலந்துரையாடவில்லை. என்று வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்தனர். இவை தொடர்பில் நீண்ட விவாதங்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து, இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு ஒருமாதகால அவகாசம் வழங்குமாறு கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க கேட்டுக்கொண்டார். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிப்பொருள்கள் கொள்ளை; கடும் நடவடிக்கைக்கு உத்தரவு

கொழும்பு, டிசெ.10
இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் கொண்டுசெல்லும் பொருள்களைக் கொள்ளையடிப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.
இயற்கை இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காகக் கொண்டு செல்லப்படும் பொருள்களைச் சிலர் கொள்ளையடிக்கின்றனர் என்று பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொலிஸ்மா அதிபர் ஏனைய பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். (எ-இ)

## உதவிப்பொருள்களுடன் இலங்கை வந்தது விமானம்

கொழும்பு, டிசெ.10
சீன அரசாங்கத்தின் இடர் நிவாரண உதவிப் பொருள்களுடன் விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை வந்தடைந்தது.
சுமார் 400 மில்லியன் ரூபா பெறுமதியான உணவு பொருள்கள் மற்றும் அனர்த்த நிவாரணப் பொருள்கள் இந்த விமானத்தில் கொண்டுவரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு இடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் நோக்கத்தில் சீனா அரசாங்கத்தால் இந்த அனர்த்த நிவாரண சேவை வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)



யாழ். காரைநகர் கசூரினாக் கடற்கரையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை டொல்பின் மீன் ஒன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. (எ-66)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நுணாவில், கண்டி வீதியிலிருந்து 200m தூரத்தில் 2 பரப்பு, 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 224 7902

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை, நிலப்பரப்பு, குடியிருப்புக்கள் சூளவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km

தொடர்பு:- 076 860 2770
076 987 8617

(CS 30852) A

## ஹேமரத்தன நாயக்க தேரரைச் சந்தித்தார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.10
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கண்டி பிரதம சங்கநாயக்க தேரரான பல்லேகம ஹேமரத்தன நாயக்க தேரரை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார்.
இதன்போது வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் மக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்குக் கொண்டுவருவதற்கும் அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து சங்கநாயக்க தேரருக்கு ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். (41)



**31ம் நாள் நினைவஞ்சலி**



மண்ணில் 01 . 02 . 1965
விண்ணில் 10 . 11 . 2025

**அமரர் திருஞானம் ஜோண் குயின்ரஸ்**

(ஓய்வுநிலை கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
முன்னாள் மாகாண கல்வி பணிப்பாளர் - வடக்கு மாகாணம்)

ஆளுமைப் பண்பின் சிகரமதாய்
ஆயுளைப் புவிதனில் கழித்திருந்தீர்
தோழமை உணர்வில் உடனிருந்து
தோதென உறவுகள் சேர்த்துவைத்தீர்!

இளைஞர் சேவையில் பணிதொடங்கி
இளையநல் ஆசிரியனாகி வந்து
விழைவினைத் தமிழதில்த் தான்புகுத்தி
வியப்புகள் பலதைச் செய்திருந்தீர்!

கல்விப் புலத்தின் உச்சிவரை
கடினநல் உழைப்பில் தான்நடந்தீர்
சொல்லினும் செயலினும் உறுதியுடன்
சேவையில் நேர்வழி தான்நடந்தீர்!

அந்தோனியார் பதி அமைவிடத்தில்
ஆன்ம சாந்தி அடைந்துவிட்டீர்
சிந்தையில் உமையே தேடுகிறோம்
சிருஷ்டியின் வலப்புறம் அமைந்திடுவீர்!

என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்

28, சோமசுந்தரம் அவனியூ
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 310 4910

(CS/60123) J-1

## வயல்நிலத்தில் படிந்த மணலை அகற்ற மகாவலிசபை அனுமதி

கொழும்பு, டிசெ.10
வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட வயல்நிலங்களில், குவிந்துள்ள மணல் மற்றும் மணல் கலந்த மண்ணை அகற்ற மகாவலி அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது என்று புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப்பணியகம் தெரிவித்துள்ளது.
இதுதொடர்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையைக் கருத்திற்கொண்டும், இந்தப் பிரச்சினைக்குத் துரித தீர்வு காணும் நோக்கிலும், மகாவலி அதிகாரசபைக்குட்பட்ட வயல்நிலங்களில் படிந்துள்ள மணலை அகற்றுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
பயிர்ச்செய்கை நிலங்கள் அல்லது காணி உரிமையாளரின் மேட்டுநிலம் அல்லது அனுமதி பெறப்பட்ட வேறொரு காணி ஆகியவற்றுக்கு இலகுரக போக்குவரத்து முறையைப் பயன்படுத்தி மணலை அகற்றி விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடிய வகையில் அந்நிலங்களைத் தயார்ப்படுத்தமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

## டுபாய்க்குத் தப்ப முயன்றவர் போதைப்பொருளுடன் கைது

போதைப்பொருள் மற்றும் திட்டமிட்ட குற்றவாளியான ஹீனட்டியே மகேஷின் அறிவுறுத்தலுக்கமைய, டுபாய் நாட்டுக்குத் தப்பிச் செல்ல விருந்த ஒருவர், ஐஸ்போதைப் பொருளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் மினுவாங்கொடையைச் சேர்ந்த 32 வயதுடையவர். சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.
நாடுமுழுவதும் போதைப் பொருள்களை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய நடவடிக்கையின்கீழ் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் [illegible] அவர்களது பணிமனையில் 10.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org